பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 10, சனிக்கிழமை 26.08.2017 கதிர் 293

## அமைச்சரவை மாற்றம் இனிமேல் வேண்டாம்!

### முதல்வரிடம் லிங்கநாதன் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.26

“இனி ஒரு தடவை அமைச்சரவையை மாற்றம் செய்ய முற்படாதீர்கள்!”

– இவ்வாறு முதலமைச்சருக்கு ஆலோசனை வழங்கியிருக்கின்றார் புளொட்டைச் சேர்ந்த வவுனியா மாவட்டத்தின் மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன்.

புதிய அமைச்சரவை நியமனம் தொடர்பாக வட மாகாண முதலமைச்சர் பக்கம் 18

# உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரியில் நிச்சயம்!

## அதற்கான சட்டமூலம் நேற்று நிறைவேற்றம்

கொழும்பு, ஒகஸ்ட் 26

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியமையை அடுத்து, நாடு முழுவதிலும் இந்த வருடம் டிசெம்பர் இறுதியில் அல்லது ஜனவரி முற்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவது பெரும்பாலும் உறுதியாகியிருக்கின்றது.

இந்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் ஒப்பமிட்டு சரியாக 75 நாள்களுக்கும் 100 நாள்களுக்கும் இடையில் அத்தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது. பக்கம் 18

## கடலில் நடக்கும் குற்றங்கள்: ஓராண்டுக்குள் தடுப்போம்!

### தளபதி சின்னையா பிரதிக்ஞை



கொழும்பு, ஒக.26

இலங்கை கடற்பரப்பில் இடம்பெற்றுவரும் குற்றச் செயல்கள் மற்றும் கடத்தல் சம்பவங்களை ஒரு வருடத்துக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவேன் என கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ரவிஸ்சின்னையா தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையின் 22ஆவது தளபதியாக பொறுப்பேற்றுள்ள வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா நேற்றுக் காலை அஸ்கிரிய, மல்வத்து பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசிபெற்றார். பக்கம் 18

## பொலிஸ் மீது வாள்வெட்டு:

## அடையாள அணிவகுப்பு எதிர்வரும் வியாழனன்றே

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ். கொக்குவில் பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் மீது மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டுசம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நேற்று அடையாள அணிவகுப்புக்கு உட்படுத் பக்கம் 18

## உடுப்பி முகாம்பிகை கோயிலில் இன்று பிரதமர் ரணில் தரிசனம்

உடுப்பி, ஓக.26

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் உடுப்பி மாவட்டத்தில் உள்ள கொல்லூர் முகாம்பிகை அம்மன் கோவிலுக்கு, வழிபாட்டுக்காக இன்று காலை 11மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செல்கின்றார். பக்கம் 18

## புதிய அமைச்சர்கள் பதவியேற்பு

## நீதி: தலதா அத்துக்கோறளை பௌத்தம் : காமினி ஜயவிக்ரம

கொழும்பு, ஒக.26

இதுவரை வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சராகப் பணியாற்றிய தலதா அத்துகோறளை நீதி அமைச்சராகவும்– வலுவான அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சராகவிருந்த காமினி ஜயவிக்ரம பெரேரா பௌத்த சாசன பக்கம் 18





## அம்மன் சிலை சேதமாக்கப்பட்டது

முல்லைத்தீவு, ஒக.26

முல்லைத்தீவு – மாங்குளம் பகுதியில் உள்ள அம்மன் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த அம்மன் சிலை இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ம)

## 20ஆவது திருத்தத்தை முன்னெடுப்பதா? உயர்நீதிமன்றின் தீர்ப்பில்தான் முடிவு!

கொழும்பு, ஒக.26

அரசமைப்பின் இருபதாவது திருத்தத்தைத் திட்டமிட்டபடி முன்னெடுப்பதா என்பது அத்திருத்தம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் முடிவின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

அரசுத் தரப்பு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

இந்தத் திருத்தம் மக்களின் வாக்குரிமையுடன் சம்பந்தப்பட்டுள்ளது.

அத்தோடு தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவத்’ தேர்தல் முறையை மாற்றி, முறையே விகிதாசார மற்றும் தொகுதிவாரி பக்கம் 18

## அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை ஆதரிப்பதற்கு கூட்டமைப்பு நிபந்தனை

கொழும்பு, ஒக.26

அரசமைப்புக்கு அரசு சமர்ப்பித்துள்ள இருபதாவது திருத்தத்தை ஆதரிப்பதற்கு பல்வேறு நிபந்தனைகளை தமிழ்க் கூட்டமைப்பு விதித்திருக்கின்றது.

இந்த அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு ஆகக் குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவ தேவை என்பது தெரிந்ததே.

தற்போதைய நிலையில் பக்கம் 18

## முகமாலையில் வெடிவிபத்து: இருவர் காயம்!

கிளிநொச்சி, ஒக.26

கிளிநொச்சி, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களில் ஒன்றான இந்திராபுரம் கிராமத்தில் நேற்று மாலை ஏற்பட்ட வெடிவிபத்தின் போது இருவர் காயமடைந்துள்ளனர். பக்கம் 18

## செப்.2 ஆம் திகதிப் பரீட்சைகள் 04ஆம் திகதிக்கு மாற்றப்பட்டன

### பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஒக.26

கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 02ஆம் திகதி நடைபெறவிருந்த இரண்டு பரீட்சைகள் 04 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளன என பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம். என்.ஜே.புஷ்பகுமார அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் நடைபெற பக்கம் 18


## காணாமற்போனோர் சர்வதேச தினத்தை ஒட்டி

# வடக்கு, கிழக்கு எங்கும் புதனன்று கவனவீர்ப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

“வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக எமக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என்பதையும், அதற்காக நாம் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் உலகுக்கு மீண்டும் ஒரு தடவை உணர்த்துவதற்காக, எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கு – கிழக்கு எங்கும் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன”

– இவ்வாறு தெரிவித்தார், வடக்கு மாகாண சபை பக்கம் 18




## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 140கிலோ கஞ்சா தமிழகத்தில் மீட்பு

இராமேஸ்வரம்,ஒக.26

இந்தியாவின் தனுஷ்கோடியை அடுத்துள்ள கம்பிப் பாடு கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த சுமார் 140கிலோ கஞ்சாப் பொதிகளைத் தனுஷ்கோடி பொலிஸார் நேற்று கைப்பற்றினர்.

தனுஷ்கோடி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது பக்கம் 18

## சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுயாதீன செயற்பாடு அவசியம்!

### வற்புறுத்துகிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக.26

பிணைமுறி தொடர்பான ஆணைக்குழுவின் நடவடிக்கைகளோ, சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகளோ அழுத்தங்களின்றி சுயாதீனமாக தொடர வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கையை சீர்குலைக்கஇடமளிக்கமுடியாது என்றும் அவர் பக்கம் 18

## நல்லூரில் தவறவிட்ட பொருள்கள் சில யாழ்.மாநகர சபையில்!

யாழ்ப்பாணம், ஒக.26

நடைபெற்று முடிந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ திருவிழா வின்போது பக்தர்களால் தவறவிடப்பட்ட கைக் கடிகாரம், தேசிய அடை யாள அட்டை, வங்கி அட்டை, உத்திராட்ச மாலை, தொலைபேசி, திறப்புகள் மற்றும் சில கைப்பைகள்போன்றவை யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஒப்படைக்கப் பட்டுஇன்றுவரைஉரிமை கோரப்படாதநிலையிலுள் ளன. இந்தப் பொருள் களுக்கு உரியவர்கள், உரிய அடை யாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ் மாநகர சபையினர் அறி வித்துள்ளனர்.

(இ)

## கனகராயன்குளத்தில் நேற்று விபத்து: ஒருவர் மரணம்!



வவுனியா, ஓக. 26

வவுனியா, கனகரா யன்குளம் பகுதியில் சைக்கிளும், மோட்டர் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளான தில் ஒருவர் மரண மடைந்துள்ளார்.

நேற்றுமதியம்இந்த விபத்துஇடம்பெற்றுள் ளது.

கனகராயன்குளம் குறிசுட்டகுளம்சந்திக் கருகில் ஏ9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளும், சைக்கி ளும் மோதி விபத்துக் குள்ளாகின.

இதன்போது சைக் கிளில் சென்ற குறி சுட்டகுளத்தில் வசித்து வரும் இராசரத்தினம் பாலசிங்கம் (வயது 62) என்பவர் சம்பவ இடத்திலேயே பலி யாகியுள்ளார்.

மோட்டார் சைக்கி ளில் சென்ற இரு இளைஞர்களில் ஒரு வர் காயமடைந்துள் ளார். இது தொடர்பான விசாரணைகளைக் கனகராயன் குளம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்ற னர்.

(க-100)

# 52 தமிழ் மக்கள் படுகொலை நினைவு:

# 27 வருடங்களின் பின்னர் முதன்முறையாக ஒன்றுகூடி கதறியழுத திராய்க்கேணி மக்கள்!

மட்டக்களப்பு, ஒக. 26

அம்பாறை - திராய்க் கேணி கிராமத்தில் 52 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத் தின் 27ஆவது வருட பூர்த்தி நிகழ்வு நேற்றுக் காலை கிராமத்தலைவர் சின்னத்தம்பி கார்த்திகேசு தலைமையில் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

திராய்க்கேணிக் கிரா மத்தில் 1990ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட 52 பேர் நினைவாக நேற்றுக் அங்கு நினைவுத்தூபி கட்டுவதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற் றது. அதற்கான நினைவுப் படிமக்கல் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.


கடந்த 27 வருடங் களில் இப்படியானதோர் ஒழுங்கமைக்கப்பட்ட நினைவுதின நிகழ்வு நேற்றுத் தான் முதல் தட வையாக நடைபெற்றது. அதற்குமுன்பு சிறியஎ வில் ஆங்காங்கே சிறு சிறு வைபவங்கள் இடம் பெற்றிருந்தன என மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றையதினம் முதன் முறையாக அங்கு கூடிய உறவினர்கள் ஒப்








பாரி வைத்து அழுதனர். அவர்கள் கதறியழுதமை பலரது மனதையும் நெகிழ வைத்தது.

அங்கு படுகொலை செய்யப்பட்ட 52 பேரின் பெயர்விவரங்கள் தொங்க விடப்பட்டிருந்தன. அவர் களின் உருவப் படங்க ளும் அஞ்சலிக்காக வைக் கப்பட்டிருந்தன.

அதற்கு முன்பாக இருந்த பொதுச்சுடரை அதிதிகள் ஏற்றியதும் உரு வப்படத்திற்கு அவரவர் குடும்ப உறவுகள் அகல் விளக்கேற்றி தீபமேற்றி னர். அத்தருணம் அவர்கள் கண்ணீர்மல்க கதறிக்கதறி அழுதனர்.

பின்னர் தலைவர் சி. கார்த்திகேசு வரவேற் புரையுடன் கூடிய தலை மையுரையை நிகழ்த்தி னார். பின்னர் பிரதம அதிதியான பிரதேசசெய லாளர் ரி.ஜே.அதிசயராஜ் உரையாற்றினார்.

தொடர்ந்து கிராம சேவையாளர் கே.நல்ல ரெத்தினம், சமூகசேவை யாளர் கி.ஜெயசிறில், பிரதிநிதிலவன்ஆகியோர் உரையாற்றினர். கிராம பிரதிநிதி கே.யோகநாதன் நன்றியுரையாற்றினார்.

நிகழ்வு இடம்பெற்ற வளாகத்திலுள்ள முத்து மாரியம்மன் ஆலயத்தில் பகல்பூசையும் தொடர்ந்து அன்னதானமும் இடம் பெற்றன.

(க)

## ரயில் கடவை காப்பாளர்கள் ஜனாதிபதியைச் சந்திக்க நடைபயணம்




வவுனியா, ஒக. 26

வடக்கு ரயில் கடவை காப்பா ளர்கள் தங்களுக்கு நிரந்தர நிய மனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி நேற்று பகல் 12 மணிக்கு வவுனியாவிலி ருந்து ஜனாதிபதியை சந்திக்கும் நோக்கத்துடன் நடைபயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு ரயில் கடவை காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஜே.ராஜ்குமார் தலைமையில் ஏழு உறுப்பினர்கள் இந்த நடை பணத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா மத்திய பேருந்து தரிப்பிடத்திற்கு முன்னாலிருந்து ஆரம்பமான இந்த நிகழ்வைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு கிழக்கு ரயில் கடவை ஊழியர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, அவர்களுக்கு நிரந் தர நியமனம் வழங்க வேண்டும் என மத்திய போக்குவரத்து அமைச் சர் நிமல் சிறி பால டி சில்வாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட போதும் நடவடிக்கை எதுவும் எடுக் கப்படவில்லை.

அத்துடன், 250 ரூபா ஊதியத் திற்கு அரசு இந்த ஊழியர்களை அடிமைகள்போல் நடத்திவருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நடைபயணத்தின் முன்பாக வடக்கு, கிழக்கு ரயில் கடவைக் காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஜே.ராஜ்குமார் தெரி வித்தவை வருமாறு:-

கடந்த நான்கு ஆண்டு காலமாக பொலிஸாரதும் ரயில்வேத்திணைக் களகத்தின் அதிகாரிகளின் பொய் யான வாக்குறுகளை நம்பி ஏமாற் றப்பட்டுள்ளோம்.

எமது நாட்டின் ஜனாதிபதியை சந்தித்து எங்களுக்கு நீதி வழங்க வேண்டும். எங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்ற கோரிக் கையை முன்வைக்க வவுனியாவி லிருந்து கொழும்புக்கு எமது நடை பயணத்தை ஆரம்பித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-100)

## ஒட்டுசுட்டானில் விபத்து; சாரதி படுகாயம்!

வவுனியா, ஒக. 26

ஒட்டுசுட்டான் - கருடமடு பகுதியில் பட்டா வாகனம் நேற்றுக் காலை 10 மணியளவில் தடம் புரண்டு விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள் ளது.

புதுக்குடியிருப்பு பகுதியிலிருந்து ஒட்டுசுட் டான் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது கருடமடு பகுதியில் வளைவில் திரும்ப முற்பட்ட போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த பட்டா வாகனம் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த பட்டா வாக னத்தின் சாரதி, ஒட்டுசுட்டான் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(க-100)

## இலங்கையின் பொருளாதாரத்தில் வளர்ச்சி: உலக வர்த்தக ஸ்தாபனம்

கொழும்பு, ஒக. 26

இலங்கையின் பொருளாதாரத்தில் வளர்ச்சி காணப்படு கிறது என உலக வர்த் தக ஸ்தாபனம் தெரி வித்துள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டுடன் ஒப்பிடு கையில் 2016 ஆம் ஆண்டில் தெளிவான வளர்ச்சி ஏற்பட்டுள்ள தாக, ஆய்வுகள் பல புலப்படுத்துகின்றன என வர்த்தக ஸ்தா பனத்தின் அறிக்கை யொன்றில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மொத்தம் 164 நாடு களின் பொருளாதார அபிவிருத்திபற்றிஉலக வர்த்தக ஸ்தாபனம் கவ னம் செலுத்தியிருந் தது.

ஏனைய நாடுகளு டன் ஒப்பிடுகையில் இலங்கையின் கொடுக் கல் வாங்கல்கள் திருப் திகரமாக உள்ளதென ஸ்தாபனத்தின் அறிக் கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

(க)

# பெண் பொலிஸ் உத்தியோகத்தரால் காதல் வயப்படுத்தி திருடன் கைது

## காதல் மயக்கத்தில் வந்தபோது மாட்டினார்

கொழும்பு, ஓக.26

வர்த்தக நிலையத்தில் திருடி விட்டுத் தலைமறைவான திருடனை காதல் வலையில் வீழ்த்தி பொலிஸார் கைது செய்தனர். பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே திருடனைக் காதலிப்பது போல நடித்து கைது செய்ய உதவினார்.

பண்டாரகம கல்துடே பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இரு தடவைகள் திருட்டுப்போனநிலையில்அதுதொடர்பாகபண்டாரகமபொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியினால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் களவு போன வர்த்தக நிலையம் முன்பாக இருந்த வீட்டில் வசித்து வந்த நபர் களவு போன தினத்தில் இருந்து காணாமல் போனார். அவரில் சந்தேகம் ஏற்பட்டதால் அவர் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது அந்தநபர்தங்கியிருந்த வீடு பூட்டப்பட்டிருந்த போதிலும் அதில் ஒரு தொலைபேசி இலக்கம் எழுதப்பட்டிருந்தது. அது சந்தேக நபரினுடையதுஎன்பதைதெரிந்துகொண்டபொலிஸ்பொறுப்பதிகாரி அதை ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தரிடம் கொடுத்து இரவில் அழைப்பை ஏற்படுத்தச் செய்துள்ளார்.

அந்தப் பெண் பொலிஸ் உத்தியோகத்தரும் சந்தேக நபருடன் வசியமாக பேசி அவரை காதல் வயப்படுத்தினார். காதல் போதையில் அந்தப் பெண் பொலிஸ்உத்தியோகத்தரை சந்திக்க வந்த திருடன் வசமாக பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார்.

இதனையடுத்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அந்த வர்த்தக நிலையத்தில் திருடிய பொருள்கள் மற்றும் பணம் என்பன உள்ளடங்கலாக சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பணத்தை திரட்டியதாகவும், பின்னர் அளுத்கம பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரிகள் இருவருடன் மஹியங்கனைக்கு சென்றதாகவும் அவர்களுடன் சுற்றித் திரிந்ததாகவும் கூறினார்.

இதையடுத்து மேற்படி நபர் நீதிமன்ற உத்தரவின்பேரில் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை குறித்த நபர் சிறு வயதில் தனது தாயை மின்சாரம் பாய்ச்சி கொலை செய்தமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவராவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# பௌத்த பிக்குகளுக்கு யோகாசனப் பயிற்சி





கொழும்பு, ஓக.26

பௌத்த பிக்குகளுக்கான விசேட ஒருநாள் யோகா பயிற்சி நேற்று பொரளை 'சந்தஹம் மதுர' கூடத்தில் இடம்பெற்றது.

அத்துரலியே ரத்ன தேரரின் ஆலோசனைக்கு அமைய விளையாட்டு அமைச்சர் தயாசிறி ஜயசேகரவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்தியாவில் யோகா சங்கத்தை அமைக்க முன்னின்ற கலாநிதி அருண் கோடிஸ்கார் பௌத்த பிக்குகளுக்கு யோகா பயிற்சிகளை வழங்கினார்.

இந்தப் பயிற்சியில் இளம் பிக்குகள் உட்பட அதிகளவானோர் கலந்துகொண்டனர். (ம)

# எரிபொருள் நிரப்பு நிலையம் தீப்பற்றி எரிந்து நாசமானது



கொழும்பு - கண்டி பிரதான வீதியில் கலகெடிஹேன பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் நேற்று ஏற் பட்ட தீ விபத்தினால் அந்த எரி பொருள் நிரப்பு நிலையம் முற் றாக எரிந்து அழிந்தது. அந்தஎரிபொருள்நிரப்புநிலையத்தில்தீப்பற்றியவேளை அதைஅணைக்கஅங்கிருந்தபணியாளர்கள்முயன்றனர். எனினும், தீவேகமாகப்பரவியதால்அந்த முயற்சியை அவர்கள்கைவிட்டனர்.

தீ பற்றிய வேளை எரி பொருள் நிலையத்தில் நின்ற எரி பொருள் கொள்கலன் வாகனம் ஒன்றும் தீப்பற்றி எரிந்து அழிந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# ஞானசார தேரருக்கு எதிரான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, ஓக.26

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்த ஞானசார தேரருக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு எதிர் வரும் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடைப் பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரியொருவரின் சேவைக்கு தடங்கல் ஏற்படுத்தியதாக ஞானசார தேரருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

அந்த வழக்கு நேற்று கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே ஒத்திவைக்கப்பட்டது. (ம)

# சிவப்பு ஒளியையும் மீறிச்சென்ற உழவுயந்திரம் தடம் புரண்டது

## யாழ்.ஆரியகுளம் சந்தியில் நேற்று

யாழ்ப்பாணம், ஓக.26

மணல் ஏற்றிச்சென்ற உழவுயந்திரம் வீதிச் சமிக்ஞையையும் பொருட்படுத்தாமல் வேகமாகச் சென்றபோது தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. இச்சம்பவம் யாழ். ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்றது.

மேற்படி உழவுயந்திரம் யாழ். ஆரியகுளம் சந்தியூடாகச் செல்ல முற்பட்டபோது அங்கிருந்த சிவப்பு வீதிச் சமிக்ஞை ஒளிர்ந்து கொண்டிருந்தது. ஆனால் அதையும் பொருட்படுத்தாமல் வேகமாகச் சென்ற மேற்படி உழவுயந்திரம் சற்றுத் தூரம் சென்றதும் தடம் புரண்டது எனக் கூறப்படுகின்றது.

இதன்போது உழவுயந்திரச் சாரதி படுகாயமடைந்தார். அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)



வல்வெட்டித்துறை சைனிக் கழகத்தின் வைரவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட வினோத உடைப் போட்டியின்போது பதிவாக்கப்பட்டவைகளில் சில... (ம)

# போலி ஆவணங்களை தயாரித்த இருவர் கைது

கொழும்பு, ஓக.26

போலி ஆவணங்களை தயாரித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என குற்றவியல் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

போலி வாகன அனுமதிப் பத்திரம், இறப்பர் முத்திரை, தற்காலிக வாகன அனுமதிப் பத்திரம், மோட்டார் வாகனப் பதிவு அத்தாட்சிப் பத்திரம், பல்வேறு நிறுவனங்களின் கடிதங்கள், தபால் அடையாள அட்டை மற்றும் வாகன இலக்கத் தகடுகளுடன் ராகமை பகுதியில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ராகமை பகுதியில் வசிப்பவர்கள் என்பதுடன் ஒருவர் களனி பிரதேச செயலகத்தில் சாரதியாக சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மற்றைய சந்தேகநபர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர் என இனங்காணப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் குற்றவியல் விசாரணைப் பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (ம)

# பெண்ணுக்கு ஆபாசப்படம் அனுப்பிய இளைஞர் கைது

மட்டக்களப்பு, ஓக.26

பெண்ணொருவரின் கையடக்கத் தொலைபேசிக்கு ஆபாசப் படங்களை அனுப்பிய இளைஞன் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி-05 பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மேற்படி பெண்ணின் கணவரது நண்பன் ஒருவரே இந்தச் செயலில் ஈடுபட்டவராவார். இது தொடர்பாக கணவன் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே அவர் கைது செய்யப்பட்டார்.

அவரை மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ம)

# மஹிந்த அணி உறுப்பினர் மைத்திரியுடன் இணைந்தார்

கொழும்பு, ஓக.26

முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ ஆதரவு அணியின் முக்கிய உறுப்பினராக இருந்த பண்டாரகம பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சஞ்சய ஹெட்டிகே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்துள்ளார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதியைச் சந்தித்த சஞ்சய ஹெட்டிகே அவருடன் இணைந்து கொள்வதாக அறிவித்துள்ளார்.

நாட்டிற்குத் தேவையான அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களுடன்நாட்டைபேண்தகு அபிவிருத்தியைநோக்கிகொண்டு செல்வதற்கு ஜனாதிபதியால் மேற்கொள்ளப் பட்டு வரும் செயற்திட்டங்களுடன் இணைந்து, தான் அர்ப்பணிப்புடன்செயற்படவுள்ளார் என அவர் கூறியுள்ளார். (ம)

நமது பார்வை
உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# ஒற்றுமை எங்கே?

ரெலோ பரிந்துரைத்த உறுப்பினரை விடுத்து, அக்கட்சியில் பிறிதொருவருக்கு அமைச்சர் பதவியை வழங்கி, கட்சித் தீர்மானத்தையும் கட்டுப்பாட்டையும் மீறி, அவரை அமைச்சுப் பதவியை ஏற்க வைத்த முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செயற்பாடு ரெலோவுக்கு விடுக்கப்பட்டுள்ள பெரும் சவால் என்று குறிப்பிட்டுள்ள அக்கட்சியின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா, அந்தச் சவாலை எதிர்கொள்வதற்குத் தாம் தயார் என்றும் கூறியிருக்கின்றார்.

சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஒரு முதிர்ந்த அரசியல்வாதி. தமிழரசுக் கட்சியுடன் மிக இளவயதிலேயே தமது அரசியல் பயணத்தை ஆரம்பித்தவர். ரெலோ அமைப்புடன் அதன் தொடக்க காலம் தொட்டே செயற்பட்டு வந்தவர். ரெலோவின் பிதாமகர்கள் எனக் கருதப்படும் குட்டிமணி, தங்கத்துரையுடனும் அவர்களுக்கு எதிரான பயங்கரவாதத் தடுப்புச் சட்ட வழக்குகளிலும் கூட நெருங்கிச் செயற்பட்டவர்.

ரெலோவின் செயலாளர் நாயகம் என்ற முறையில் அவரே கட்சியின் சார்பில் உத்தியோகபூர்வமான நிலைப்பாட்டைக் கூற வல்லவர்.

ஆகவே, 'முதல்வரின் முடிவு ரெலோவின் சுயமரியாதைக்கு விடுக்கப்பட்ட பெரும் சவால்' என அவர் கூறுகின்றமையை ரெலோவின் நிலைப்பாடாகத்தான் கொள்ளவேண்டும்.

ஆனால், அதுதான் உண்மை நிலைமையா? ரெலோவுக்குள்ளும் இவ்விடயத்தில் இரட்டை நிலைப்பாடு இருப்பதாகத் தெரிகின்றது.

ரெலோவின் தலைமைக்குழு இரண்டு தடவைகளும் அரசியல் குழு ஒரு தடவையும் கூடி, வடக்கு மாகாணசபைக்கு தங்களின் அமைச்சர் தெரிவு விந்தனே என முடிவு செய்து பரிந்துரைத்த போதிலும் - அக்கட்சியின் குணசீலனுக்கே முதலமைச்சர் விக்னேஸ்வரன் அந்தப் பதவியை வழங்கினார்.

அப்படி அவர் வழங்கியதின் பின்னணியில் ரெலோவின் ஒரு மூத்த - முக்கிய - தலைமையே பிரதானமாக உள்ளது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அமைச்சர் பதவிக்கான தமது கட்சியின் தெரிவு குறித்து -

ரெலோ தலைமைக்குழுவின் முடிவு உத்தியோகபூர்வமாகக் கடிதத்திலும், பின்னர் கட்சியின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா, துணைத் தலைவர் ஹென்றி மகேந்திரன் ஆகியோரால் நேரிலும் முதலமைச்சருக்குத் தெரியப்படுத்தப்பட்ட பின்னர் -

ரெலோவின் சில மூத்த தலைவர்கள் முதலமைச்சரைத் தனியே சந்தித்து – கட்சியின் தலைமைக்குழுவின் தீர்மானத்துக்கு மாறாக, குணசீலனுக்கு அமைச்சர் பதவியை வழங்கும்படி அழுத்தம் கொடுத்தனராம்.

அந்த அழுத்தத்தை ஏற்றே விந்தனைக் கைவிட்டு - குணசீலனுக்கு அமைச்சர் பதவியை வழங்கியிருக்கின்றார் முதல்வர் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இத்தகைய பின்கதவுப் பேச்சுகள் குறித்து முதல்வர் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

அதுவும் தனித்து ஒரு கட்சியாக ஆட்சி அமைக்காமல், பல கட்சிகளின் கூட்டமைப்பாக இருக்கும் ஒரு கட்டமைப்பு சார்பில் முதல்வர் பதவியை அலங்கரிப்பவர், இத்தகைய விடயங்களில் மிக எச்சரிக்கையாகவும் நுண்மதியுடனும் நடந்துகொள்ள வேண்டியமை அவசியமாகும்.

பெரும் பின்னடிப்புக்குப் பின்னர்தான் இந்த வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு வந்தார் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

அவர் அப்பதவிக்கு வரவேண்டும் என வெற்றிலை வைத்த கம்பவாரிதி இ.ஜெயராஜ் உட்படப் பலர் இன்று அவரது பக்கத்தில் இல்லை.

வருந்தி அழைத்தபோது அந்தப் பதவியை ஏற்க மறுத்த விக்னேஸ்வரன், தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து - ஒற்றுமைப்பட்டு - ஒன்றாக அழைத்தால், அப்பதவியை ஏற்கலாம் என்று நிபந்தனை விதித்தார்.

கடைசியாகக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு அவரைச் சென்று அழைத்த பின்னர்தான் - பெரும் பிகு பண்ணி, மறுப்புக்களுக்குப் பின்னர்தான் - முதல்வர் பதவிக்குத் தேர்தலில் குதிக்க அவர் இணங்கி வந்தார்.

தாம் முதல்வர் பதவி ஏற்பதாயின் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் ஒன்றுபட்டு, ஒற்றுமைப்படுதல் அவசியம் என்ற கருத்தில்தான் அவர் அப்படிக் கூறுகின்றார் என்று கருதிய பலரும் தமிழர் ஐக்கியத்தின் மீது விக்னேஸ்வரனுக்கு இருந்ததாகக் கருதப்படும் பற்றுக் குறித்து சிலாகித்துப் பேசத் தவறவில்லை.

ஆனால்,இன்று அவ்விடயத்தில் அவரின் செயற்போக்குக் குறித்து, எல்லோரும் அதிர்ந்துபோய் நிற்கின்றார்கள்.

வாராது வந்த வடக்கு மாகாண சபையை அவர் கையாண்ட விதத்தில் கூட்மைப்புப் பங்காளிக் கட்சிகள் இடையே குழப்பம், முரண்பாடு, பிளவுப் போக்கு. பங்காளிக் கட்சிகள் இடையேதான் என்றால் அதையும் தாண்டி பங்காளிக் கட்சிகள் ஒவ்வொன்றுக்குள்ளும் முரண்பாடு, கருத்து வேறுபாடு, குழப்பம். எல்லாம் முதல்வரின் நடவடிக்கைகளால் தோன்றியிருக்கின்றன என்றே தோன்றுகின்றது.

ரெலோவுக்குள் இப்போது கனன்று வரும் முரண்பாட்டுச் சூடு கூட முதல்வரின் நடவடிக்கையால் விளைந்த ஒன்றே.

ஒற்றுமைப்பட்டு அழைத்தார்கள். இன்று ஒன்றுபட முடியாமல் நிற்கின்றார்கள் என்ற நிலைமையே வந்துள்ளது.

# கரும்புலிச் சீருடை, கடற்படைத் தொப்பி முள்ளிவாய்க்கால் பகுதியிலிருந்து மீட்பு



கிளிநொச்சி, ஓக.26

முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரைப் பகுதியிலிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பின், கரும்புலி அணியினரின் சீருடைத் தொப்பி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த பகுதியின்பிறிதொருஇடத்திலிருந்து, இலங்கைக் கடற்படையினரின் தலைக் கவசங்களும், தொப்பிகளும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையின் வடக்கு- கிழக்கை தமிழர் தாயகப் பகுதியாக கோரி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கை முப்படையினரையும் எதிர்த்துப் போரிட்டது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள்அமைப்பை இலங்கை அரசு ஒரு பயங்கரவாத அமைப்பாக அறிவித்து, முப்படைகள் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது பெரிய தாக்குதல்களை மேற்கொண்டிருந்தது.

உள்நாட்டு யுத்தமானது, கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி நிறைவுக்கு வந்தது.

இந்த நிலையில் இறுதிப் போரைச் சந்தித்த முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் இராணுவச் சீருடைகள் உள்ளிட்ட தடயங்கள் தற்போதும் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

(க)

# அ'புரம் கைதிகளின் கோரிக்கை நிறைவேற்றம்: முடிவுக்கு வந்தது உண்ணாவிரதப் போராட்டம்!

கொழும்பு, ஓக 26

அநுராதபுரச் சிறைச்சாலையில் மூன்று அரசியல் கைதிகள் முன்னெடுத்த தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் அருட் தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

மூன்று அரசியல் கைதிகளால் முன்னெடுக்கப்பட்டு வந்த இந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து நேற்று 5 ஆவது நாளாக நடைபெற்று வந்தது.

இந்த நிலையிலேயே நேற்றைய தினம் கைவிடப்பட்டது.

அநுராதபுரசிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளான மதியரசன் சுலக்ஷன், கணேஷன் தர்சன், ஆர். திருவருள் ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர்.

இவர்களுக்கு எதிராக வவுனியா மேல்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய நிலையில், அந்த வழக்கை வேறொரு நீதிமன்றத்துக்கு மாற்றும் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

(க)

# வித்தியா வழக்கை துரிதப்படுத்துமாறு கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்!




கொழும்பு, ஓக. 26

வித்தியாவின் படுகொலை வழக்கைத் துரிதப்படுத்துமாறு கோரியும் அரசுக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று கொழும்பில்ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் தலைமைக் காரியாலயத்திற்கு முன்னால் இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் இதுவா நல்லாட்சி, நீதியரசர் இளஞ்செழியனை சுட முயன்றவர்களைக் கைதுசெய், விஜயகலாவைக் கைதுசெய் என்பன போன்ற சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் ஆர்ப்பாட்டக்காரர்களால் மகஜர் ஒன்றும் ஐ.நா.அலுவலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

தேசிய மகளிர் வழக்கறிஞர்கள் முன்னணி இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

(க)

# யாழ்.வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட காங்கேசன் கடற்படை அதிகாரி உயிரிழப்பு!

கொழும்பு, ஓக.26

யாழில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கடற்படை அதிகாரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறைக் கடற்படை முகாமில் கடந்த 22ஆம் திகதி பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது குறித்த அதிகாரி மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது, கண்டியைச் சேர்ந்த மஞ்சுள சேரத் பண்டார என்ற 38 வயதான கடற்படை அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

(க)

## நாளை

27.08.2017
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : சுவாதி மு.இ 8.26 வரை
திதி : சஷ்டி பி.இ 12.38 வரை
சுபநேரம் : 9.05 – 10.35 வரை
இராகுகாலம் : 4.35 – 6.05 வரை

# கடும் வறட்சியால் 13 லட்சம் பேர் பாதிப்பு; நிவாரணம் வழங்குவதில் பெரும் நெருக்கடி

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 26

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் 13 லட்சத்து 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் வறட்சியான காலநிலை நீடிக்குமாயின் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதில் பெரும் நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் நிலவும் கடும் வறட்சியான காலநிலை தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் நிலவும் கடும் வறட்சியினால் 20 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். இதன் காரணமாக 13 லட்சத்து 23 பேர் தற்போது வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1 லட்சத்து 28 ஆயிரத்து 652 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1 லட்சத்து 15 ஆயிரத்து 308 பேரும், மன்னார் மாவட்டத்தில் 1 லட்சத்து 15 ஆயிரத்து 928 பேரும், வவுனியா மாவட்டத்தில் 1 லட்சத்து ஆயிரத்து 914 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 1 லட்சத்து 64 ஆயிரத்து 463 பேரும் மாவட்ட ரீதியில் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசு 150 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

திறைசேரியினூடாக இந்த 150 கோடி ரூபா நிதியினை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தொடர்ந்தும் வறட்சியான காலநிலை நீடிக்குமாயின் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதில் பெரிய நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.

தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிவாரண நிதியை இரட்டிப்பாக ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கெப்பத்திகொல்லாவ பகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோது விடுத்த பணிப்புரைக்கமையவே குறித்த உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை புத்தளம், குருநாகல், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்காக குறித்த நிதியிலிருந்து 143 கோடி ரூபாய் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, பதுளை, அம்பாந் தோட்டை, வவுனியா, மன்னார் மாவட்ட மக்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் இந்த மாவட்ட செயலாளர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க)

# திடீரென பைத்தியம் மஹிந்தவுக்கு!

## அமைச்சர் திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஓக. 26

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே கட்சியின் தலைமை பதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கியிருந்தார். தற்போது, தான் பதவியை வழங்கவில்லை என்கிறார். எனவே, அவருக்கு திடீரென பைத்தியம் பிடித்து விட்டது என்றே கூறவேண்டும் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தையிலுள்ள கண் வைத்தியசாலை ஒன்றிறை மேற்பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் வீட்டில் சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களின் சந்திப்பொன்று இடம் பெற்றது.



அதன்போதுதான் சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் மாற்றப்படுமா இல்லையா என்பது குறித்து பேசப்பட்டது.

அதன்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கட்சியின் தலைமைத்துவத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடத்தில் வழங்குகிறேன் என்று கூறினார்.

அப்போதைய கட்சியின் செயலாளராகவிருந்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடத்தில் அவசரமாக தலைமைத்துவத்தை மாற்றும் பத்திரத்தில் கைச்சாத்திடுங்கள் என்றும் பணித்தார்.

எனவே, தற்போது தன்னை யாரும் விலக்கவில்லை. தானே கட்சியின் தலைவர் என்று கூறுகின்றார்.

திடீரென அவருக்கு பைத்தியம் பிடித்துள்ளதோ என்று எனக்கு சந்தேகம் தோன்றுகின்றது. அதனால்தான் அவரே வழங்கிய தலைமைத்துவத்தை தற்போது இல்லை என்று மறுக்கின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## தேசிய அரசின் அடுத்த எட்டு ஆண்டுக்கான தொலைநோக்குத் திட்டம்!

சமகால இணக்கப்பாட்டு தேசிய அரசின் அடுத்தஎட்டாண்டுக்கான தொலை நோக்கை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் எதிர்வரும் நான்காம் திகதி மக்கள் முன் சமர்ப்பிக்கவுள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரட்ண இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசின் தொலை நோக்கு அறிமுகம் செய்யப்படுவதை அடுத்து நாட்டில் துரித பொருளாதார சமூக அபிவிருத்தி ஆரம்பமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## போக்குவரத்துப் பொலிஸாரின் மோட்டார் சைக்கிளில் கண்காணிப்பு கமரா!

கொழும்பு, ஓக. 26

பதுளை நகர போக்குவரத்துப் பொலிஸாரின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ள புதிய மோட்டார் சைக்கிள்களில் கண்காணிப்பு கமரா பொருத்தப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன ஓட்டிகளின் தவறுகளின் போதுபோக்குவரத்துப் பொலிஸார் லஞ்சம் பெற்றுக் கொள்வது, பொது மக்களுடன் அடாவடித்தனமாக நடந்து கொள்வது என்பன போன்ற சம்பவங்கள் அடிக்கடி ஊடகங்களில் பரபரப்பாக பேசப்படுகின்றன.

அவ்வாறான சம்பவங்களைத் தடுக்கும் வகையில் பதுளை போக்குவரத்துப் பொலிஸாரின் பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ள புதிய மோட்டார் சைக்கிள்களில் கண்காணிப்புக் கமரா பொருத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் தவறிழைக்கும் பொலிஸாரை இலகுவில் கண்டு பிடிக்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

# வடக்கின் சுகாதார அமைச்சருக்கு மன்னாரில் அமோக வரவேற்பு!







மன்னார், ஓக. 26

வட மாகாணசபையின் புதிய அமைச்சராக பதவியேற்றுள்ள ரெலோவின் மாகாண சபை உறுப்பினர் ஜீ.குணசீலனுக்கு மன்னாரில் அமோக வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

புதிதாக பதவியேற்றுக் கொண்ட அவர் நேற்று முன்தினம் மாலை மன்னாருக்கு விஜயம் செய்திருந்தார்.

இதன்போது மன்னார் - தள்ளாடி சந்தியில் வைத்து மாவட்ட இளையோர்கள் மற்றும் பொது அமைப்பினர் இணைந்து சிறப்பு வரவேற்பை வழங்கியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் நகர மத்தியில் உள்ள தந்தை செல்வநாயகத்தின் உருவச்சிலைக்கு அவர் நேற்று முன்தினம் மாலை அணிவித்திருந்தார்.

அத்துடன், மன்னாரில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அலுவலகத்துக்குச் சென்று ரெலோவின் முன்னாள் தலைவர் சிறி சபாரத்தினம் மற்றும் போராளிகளுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியிருந்தார்.

அதைத் தொடர்ந்து தாழ்வுப்பாடு கிராமத்தில் மக்கள் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

(க)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இன்று

மட்டக்களப்பு, ஓக. 26

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவின் முறக்கொட்டானைச்சேனையில் அமைக்கப்பட்டுள்ள 78 வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வு கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் கே. தனபால சுந்தரம் தலைமையில் இன்று காலை நடைபெறவுள்ளது என மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் சேதமடைந்து மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கென 8 லட்சம் ரூபா செலவில் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் இதன்போது மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு அதிதிகளாக மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஜீ. சிறிநேசன், எஸ்.வியாழேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளஉள்ளமை குறிப்பிடத்தக்கது.




மட்டக்களப்பு மாவட்டத்தில் 2017ஆம் ஆண்டில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சால் கடந்த 2016 ஆம் ஆண்டில் 82 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது.

இந்த நிதியில் மாவட்டத்தின் மீள்குடியேற்ற பிரதேசங்களான கோரளைப்பற்று வடக்கு, கோரளைப்பற்று தெற்கு, கோரளைப்பற்று மேற்கு, கோரளைப்பற்று, மண்முனை மேற்கு போரதீவுப்பற்று ஆகிய பிரிவுகளில் 1035 வீடுகள் அமைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. அத்துடன், சேதமடைந்த 756 வீடுகள் 11 கோடி ரூபாவில் திருத்தப்பட்டுள்ளன. அதே போன்று இவ்வருடம் 522 $^{1}/_{2}$ கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு 656 வீடுகள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மீள்குடியேற்ற அமைச்சு மாவட்டத்தின் ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 654 பொது மக்கள் பயன்பெறும் வகையில், 2016மற்றும் 2017ஆம் ஆண்டுகளுக்கென மொத்தமாக 9 ஆயிரத்து 213 திட்டங்களுக்காக 221 கோடி ரூபாய்களை ஒதுக்கீடு செய் தது.

அவற்றில், வீடுகள் அமைத்தல், பகுதியளவில் சேதமடைந்த வீடுகள், மலசலகூடம் அமைத்தல், குடிதண்ணீர் விநியோகம், மின் விநியோகம், பாடசாலை அபிவிருத்தி வேலைகள், வீதி புனரமைப்பு உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார மேம்பாடுகளுக்கான திட்டங்கள் அடங்குகின்றன.

இதில், யுத்தத்தால் கணவரை இழந்தவர்களின் குடும்பங்களில் 396 பேருக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், ஏனைய திட்டங்களுக்குள்ளுமாக ஆயிரத்து 804 குடும்பங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று பெற்றோரை இழந்தவர்களின் 55 குடும்பங்கள், அங்கவீனமுற்றோரின் 531 குடும்பங்கள், காணாமல் போனோரது 276 குடும்பங்கள், யுத்தத்தால் உயிரிழந்தவர்களின் 265 குடும்பங்கள், புனர்வாழ்வளிக்கப்பட்ட 305 குடும்பங்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் 7ஆயிரத்து 202 மாக மொத்தம் 10 ஆயிரத்து 438 குடும்பங் கள் 2016, 2017ஆம் ஆண்டுகளில் மீள்குடியேற்ற அமைச்சின் திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன.

போர் நிறைவு பெற்றதன் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளாக கணக்கெடுக்கப்பட்ட 23 ஆயிரத்து 287 வீடுகளில் இதுவரை 17 ஆயிரத்து 495 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வருடத்தில் 3ஆயிரத்து 36 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் மீள்குடியேற்ற அமைச்சு 656 வீடுகள், தேசிய வீடமைப்பு அதிகாரசபை ஆயிரம் வீடுகள், ஐரோப்பிய ஒன்றியம் 556 வீடுகள், இந்திய வீட்டுத் திட்டத்தில் 300 வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, 500 பொருத்துவீடுகளுக்கான அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளின் கணிப்பின்படி 2 ஆயிரத்து 756 வீடுகள் இன்னமும் தேவையாக உள்ளன. அத்துடன், இந்தக் காலப் பகுதியில் அதிகரித்த குடும்பங்களுக்கான 12 ஆயிரத்து524 வீடுகளும் தேவையாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பகல் பராமரிப்பு நிலையம் மட்டு. நகரில் திறப்பு!

கொழும்பு, ஓக. 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடுமீன் பகல் பராமரிப்பு நிலையம் சிறுவர் செயலகப் பணிப்பாளர் திருமதி நயனா இ.சேனாரத்னவால் திறந்து வைக்கப்பட்டது.

உதவி மாவட்ட செயலாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் வி.தவராஜா, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர். நெடுஞ்செழியன், மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமைகள் ஆணைக் குழு இணைப்பாளர் எஸ்.அசீஸ், மாவட்ட பொறியியலாளர் ரி.சுமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (க)



## சுயதொழில் முயற்சியாளருக்கான ஊக்குவிப்பு வாழைச்சேனையில்!

மட்டக்களப்பு, ஓக. 26

வாழைச்சேனையில் சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் கோழிக்குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வு வாழைச்சேனை கால்நடை வைத்திய அதிகாரி யூ.ஜி.ஏ.எம். உடநலத்த தலைமையில், நேற்றுக் காலை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அத்துடன், மேலும் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கிழக்கு மாகாண விவசாய அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)





# வடக்கு முதல்வரின் செயற்பாடுகளால் கட்சிகளுக்குள் முரண்பாடுகள்!

### கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் கூறுகிறார்

வட மாகாண முதலமைச்சரின் செயற்பாடுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் பெற்றுள்ள கட்சிகளுக்குள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் அமைகிறது என கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் விசனம் வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம், கரடியனாறு பகுதியில் மீனவர் தங்குமிட கட்டடம் ஒன்று நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாண சபையின் பதவிக் காலம் இன்னும் சில நாள்களில் முடிவடையவிருக்கும் இந்த வேளையில், அடுத்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட மாகாணசபை போன்று முதலமைச்சர் பதவிக்கு பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற கருத்து ஒரு சாரார் மத்தியில் நிலவுகின்றது.

வட மாகாண சபை முதலமைச்சரின் தன்னிச்சையான போக்குகளைப் பார்க்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியொன்றை சாராத ஒருவரை பொதுவேட்பாளராகநிறுத்துவது என்பது சாத்தியப்பாடாத விடயம். இதில் அனுபவ ரீதியான பாடத்தைத்தான் தற்போது கற்றுக் கொண்டிருக்கின்றோம்.

ஏற்கனவே, வட மாகாண முதலமைச்சரின் செயற்பாடுகள் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கத்துவக் கட்சிகளுக்கிடையே முரண்பாடு தோன்றியது.

இருப்பினும், அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட வேளை இலங்கை தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் அவருக்குப் பக்க பலமாக இருந்தன.

வட மாகாண முதலமைச்சர் சீ.வி விக்னேஸ்வரன் பொது வேட்பாளராக இருந்தாலும் கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்ட அவரைஇந்தப்பதவிக்கு கொண்டு வந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் என்பதை எவரும் மறந்து விட முடியாது. விருப்புத்தெரிவு வாக்குகளில் அவரை முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

முதலமைச்சர், பதவிக்கு வந்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அதில் அங்கம் பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்களையும் உதாசீனம் செய்யும்வகையில் தன்னிச்சையாகவே அவர் நடந்து கொள்கின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# ஜனாதிபதியின் கைவசம் உள்ள அமைச்சுக்கள் ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவிடவில்லையாம்!

கொழும்பு, ஓக. 26

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொறுப்பில் உள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு இந்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில், அரையாண்டு காலத்தில் 3.3 வீதத்தை மட்டுமே செலவிட்டுள்ளது என அரசின் அதிகாரபூர்வ புள்ளி விவரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதன் மூலம், அமைச்சுக்களின் மோசமான வினைத்திறன் கொண்ட அமைச்சாக, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு அடையாளம் காணப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டில், அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஜனவரி முதல் ஜூன் வரையான ஆறு மாத காலத்தில் அமைச்சுக்கள் செலவீடு செய்துள்ள நிதி பற்றிய தகவல்கள் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இதற்கமைய, இலங்கை அரசில் உள்ள இரண்டு அமைச்சுக்கள் மாத்திரமே, ஒதுக்கப்பட்ட நிதியில் 50 வீதத்துக்கு மேல் செலவிட்டுள்ளன.

சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு, இந்த ஆண்டுக் காக ஒதுக்கப்பட்ட நிதியில், 70.4 வீதத்தை முதல் ஆறு மாதங்களில் செலவிட்டுள்ளது.



அடுத்ததாக, அஞ்சல் மற்றும் அஞ்சல் சேவைகள் அமைச்சு, ஒதுக்கப்பட்ட நிதி யில், 50.5 வீதத்தை செலவழித்துள்ளது.

பல்வேறு அமைச்சுக்களுக்கும் இந்த ஆண்டில், 3 ஆயிரத்து 628, 11 கோடி4 லட்சதம் ரூபா ஒதுக்கப்பட்டது. அதில், ஆயிரத்து 792, 16 கோடியே 51 லட்சம் ரூபா மாத்திரம், முதல் அரையாண்டு காலத்தில் செலவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொறுப்பில் உள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு இந்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில், 3.3 வீதத்தை மட்டுமே செலவிட்டுள்ளது.

டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சு, 3.9 வீதமான நிதியை செலவிட்டுள்ளது.

சுற்றுலா அமைச்சு 6.8 வீதமும், பொதுத்துறை நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சு 5.9 வீதமும், தமக்கான ஒதுக்கீடுகளை செலவிட்டுள்ளன என்றும் அரசு தெரிவித்துள்ளது. (க)

---

## மனைவி மீது துப்பாக்கிச் சூடு;
## கணவருக்கு சிறை வாசம்!

கொழும்பு, ஓக. 26

குடிபோதையில் மனைவி மீது துப்பாக்கி பிரயோகம்மேற்கொண்டு கொலை செய்ய முயற்சித்தார் எனக் கூறப்படும் கணவருக்கு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் இடம்பெற்ற மதுபான விருந்தின் பின்னர் இந்தக் கொலை முயற்சி இடம்பெற்றுள்ளது.

குற்றத்தை ஏற்றுக் கொண்ட ஓய்வு பெற்ற முன்னாள் பொறியியலாளருக்கு மேல் மாகாண உயர் நீதிமன்ற நீதிபதி பியசிலியினால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த தண்டனைக்கு மேலதிகமாக 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தண்டனைக்கு மேலதிகமாக சம்பவத்தில் படுகாயமடைந்த மனைவிக்கு ஒரு லட்சம் ரூபா பணம் நஷ்டஈடாக வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கட்டான மிரிஸ்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதான ஓய்வுபெற்ற பொறியியலாளர் துஷார பெர்னாட்ஸ்டீவன் என்பவரே குற்றத்தை ஏற்றுக் கொண்டவராவார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19ஆம் திகதி இந்த கொலை முயற்சி இடம் பெற்றுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட மனைவியால் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

---

# இரண்டாவது காலாண்டில் அரசின் வருமானம் வீழ்ச்சி

கொழும்பு, ஓக. 26

இலங்கை அரசின் வருமானம், இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அரசின் 2017 ஆண்டின் முதல் அரை ஆண்டு நிதி நிலைமை தொடர்பாக அமைச்சர் கயந்த கருணாதிலக நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அதிகாரபூர்வ தகவல்களை வெளியிட்டார்.

இதற்கமைய, இந்த ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், இரண்டாவது காலாண்டில் இலங்கை அரசின் வருமானம், 14,240 மில்லியன் ரூபாவால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில், அரசின் வருமான 445,250 மில்லியன் ரூபாவாக இருந்தது.

இது இரண்டாவது காலாண்டில், 431,010 மில்லியன் ரூபாவாக குறைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)



---

## பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் சர்வதேச கருத்தரங்கு கொழும்பில் ஆரம்பம்!




கொழும்பு, ஓக. 26

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் கீழ் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் சர்வதேச கருத் தரங்கும் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுக் காலை 09.30 மணிக்கு கொழும்பு காலிமுகத்திடல் ஹோட்டலில் கோலாகலமாக ஆரம்பமானது.

பனை வளத்தின் மகிமையை உலகறியச் செய்வோம்எனும் தொனிப் பொருளில் ஆரம்பமாகவுள்ள இந்தக் கருத்தரங்கும் கண்காட்சியும் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

நேற்றையை ஆரம்ப நிகழ்வில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் பிரதம விருந்தினராக கலந்துக்கொள்ளவுள்ளார்.

இதேவேளை, குறித்த நிகழ்வில், புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.சுரேஷ், இராஜாங்க அமைச்சின் செயலாளர் சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதன்முறையாக தலைநகர் கொழும்பில் பனை அபிவிருத்திச் சபை இவ்வாறான சர்வதேச கருத்தரங்கு மற்றும் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ள நிலையில் இதில் இலங்கை மாத்திரமன்றி இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து உட்பட பல்வேறு நாடுகளிலிருந்தும் துறைசார் நிபுணர்களும், ஏற்றுமதியாளர்களும் கலந்து கொள்கின்றனர்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து பயனடையுமாறு பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வைத்தியர் இ. சிவசங்கர் கேட்டுள்ளார். (க)

---

## மத்தளவை விற்பதற்கு ஊழியர்கள் எதிர்ப்பு!

கொழும்பு, ஓக. 26

மத்தள விமான நிலையத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்வதை கடுமையாக எதிர்க்கிறோம் என விமான நிலையத்தின் சுதந்திரக் கட்சி தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மத்தள விமான நிலையம் இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்கப்படுவதை எதிர்த்து நேற்று முன்தினம் விமான நிலைய வளாகத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

விமான நிலையத்தின் சுதந்திரக்கட்சித் தொழிற்சங்கம் அதனை ஏற்பாடு செய்திருந்தது. ஆர்ப்பாட்டத்தின் பின்னர் சங்கத்தின் தலைவர் முஹந்திரம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றையும் நடத்தியிருந்தார்.

இதன்போது அவர் தெரிவித்தவைவருமாறு:-

எந்தவொரு நாட்டுக்கும் மாற்று சர்வதேச விமான நிலையம் ஒன்று அத்தியாவசியமாகும். அந்த வகையில் இலங்கைக்கு நீண்டகாலமாக தேவைப்பட்ட மாற்று விமான நிலையத்தின் தேவை 2013 ஆம் ஆண்டளவிலேயே கைகூடியது.

அந்த வகையில் இந்த விமான நிலையத்தை இழப்பது பெரும் நட்டமாக அமையலாம்.

அத்துடன் நாட்டின் விமானநிலையமொன்றை வெளிநாடொன்றுக்கு கையளிப்பது தேசியப் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

மேலும், விமான நிலையத்தின் நிர்வாகம் வேறொரு நாட்டிடம் கையளிக்கப்படும்போது இதன் ஊழியர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும்.

எனவே, இது தொடர்பில் அரசு கவனம் செலுத்துவதுடன் விமானநிலையத்தை இந்தியாவுக்குக் கையளிப்பதை இடைநிறுத்த வேண்டும்.

இல்லாவிட்டால் அரசுக்கு எதிராக பெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முல்லையில் 3 இடங்களில் நடமாடும் மக்கள் சேவை

முல்லைத்தீவு,ஓக.26
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஜனாதிபதி நடமாடும் மக்கள் சேவை மூன்று பிரதேசங்களில் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக ஜனாதிபதியின் பணிப்பின் பேரிலும் பிரதமரின் ஆலோசனைக்கமையவும் நடமாடும் மக்கள் சேவைகள் நடைபெறவுள்ளன.

இந்த நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை துணுக்காய் பிரதேச செயலகத்திலும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலகத்திலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை கரைதுறைப்பற்றுப் பிரதேசத்திலும் நடைபெறும்.

மக்கள் நடமாடும் சேவையில் புதிய சாரதி அனுமதிப் பத்திரம் பெறுதல், சாரதி அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல், பிறப்பு, இறப்பு , விவாக அத்தாட்சிப் பத்திரம் பெறல், முதியோர் அட்டை பெறல், தேசிய அ.அ.பெறல், காணி அனுமதிப்பத்திரம் பெறல் போன்ற சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (இ)

## தினசரி ராசி பலன் 26.08.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 10 ஆம் நாள் பஞ்சமித்திதி இரவு 09.17 மணி வரை. பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: சித்திரை மாலை 3.51 மணி வரை. பின்னர் சுவாதி. மரணயோகம் மாலை 3.51 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்- காலை 09.07 மணி முதல் 10.39 மணி வரை. சுபநேரம்- மாலை 03.05 மணி முதல் 4.34 மணி வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத வளர்பிறை.**

பிறந்த நட்சத்திர வழிபாடு: சித்திரை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். செலவுகள் அளவுக் கதிகமாகும். வியாபாரத்தில் லாபம் குறையும். தொழில் பிரயாசை அதிகமாகும்.

**ரிஷபம்:** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். வேலை தேடுவோருக்கு அரச வேலை கிடைக்கும் மாணவர் உயர் கல்வி நிமித்தம் வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். வெளிநாட்டு உறவினர் வருகையால் களிப்பும் கலகலப்பும் அதிகரிக்கும்.

**கடகம்:** கவலையான நாள். பண வருவாய் குறையும். குடும்ப செலவு அதிகரிப்பால் கவலை உண்டாகும். உடல் நோய்வாய்ப்படும். எதிரிகளால் தொல்லை உண்டாகும்.

**சிம்மம்:** மத்திமமான நாள். பொருள் வரவு சுமாராக இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் உண்டாகும். தேகக் குறைவால் வைத்தியச் செலவுகள் உண்டாகும். வீண் அலைச்சல்களால் உடலில் அசதி ஏற்படும்.

**கன்னி:** உயர்வான நாள் ஆகும். வருமானம் உயர்வடையும். குடும்பம் ஒற்றுமை மேலோங்கும். பெண்கள் சுயதொழிலில் முன்னேற்றம் அடைவார்கள். கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை.

**துலாம்:** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். தொழிலில் உயர்வும் வருமானமும் அதிகரிக்கும். அசையாச் சொத்துக்களை வாங்கும் யோகம் உண்டாகும்.

**விருச்சிகம்:** சஞ்சலமான நாள் ஆகும். பணம் பற்றாக் குறையாக இருக்கும். குடும்ப உறுப்பினர்களின் சுகவீனம் காரணமாக மனக்கவலை உண்டாகும். மாணவர்களின் கல்வியில் தடை உண்டாகும்.

**தனுசு:** இன்பமான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். அரசு வழியால் வீடு, காணி என்பன கிடைக்கும். சிலர் புண்ணிய ஸ்தல யாத்திரை செல்வார்கள்.

**மகரம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். பெண்களின் அபிலாஷைகள் நிறைவேறும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும். வெளிநாட்டுப் பயண முயற்சி அனுகூலமாகும்.

**மீனம்:** கவலையான நாள். எடுக்கும் முயற்சிகள் தோல்வி அடையும். பொருளாதாரம் நலிவடையும். உடல் நலம் பாதிப்புறும்.

சந்திராஷ்டமநாள்: பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி , ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நால்வர் உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், ஓக. 26
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ள தமது உறவுகளை மீட்டுத்தருமாறு வலியுறுத்தி கிளிநொச்சியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டோரில் இதுவரை நால்வர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், எஞ்சியுள்ளவர்கள் உயிர் துறப்பதற்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டுள்ள உறவுகளை மீட்டுத் தாருங்கள் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆசிய தொழில்நுட்ப அறிவுகூட மாணவர்கள் மற்றும் சம உரிமை இயக்கத்தின் உறுப்பினர்களுக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டும், கைதுசெய்யப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஒருபுறம் இருக்க, யுத்தத்தின் இறுதி நாள்களில் இலங்கை இராணுவத்தின் உத்தரவுக்கு அமைய சரணடைந்த மற்றும் இராணுவத்திடம் உயிருடன் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் உட்பட ஏராளமானோர் வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு காணாமல் போகச் செய்யப்பட்டுள்ள தமது உறவுகளை மீட்டுத்தரக் கோரி மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டம் அன்றாட நிகழ்வாகத் தொடர்கின்றது.

இந்தநிலையில், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகில் 187 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை ஆசிய தொழில்நுட்ப அறிவுகூட மாணவர்கள் மற்றும் சம உரிமை இயக்கத்தின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நேரில்சென்று சந்தித்துள்ளனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகளின் கோரிக்கைகளை கேட்டறிந்து கொண்ட அவர்கள், போராட்டகாரர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்தும் ஆராய்ந்துள்ளனர்.

இந்த நிலையில், போராட்டகளமே வாழ்வாகிப் போயுள்ள நிலையில் நால்வர் உயிரிழந்துள்ளனர் எனச் சுட்டிக்காட்டியுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது சங்க இணைப்பாளர் லீலாவதி ஆனந்த நடராஜா, தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாதிருப்பதை உறுதி செய்யவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (க)

# அஸ்வர் வைத்தியசாலையில் அனுமதி; நலம் விசாரிக்கச் சென்றார் மஹிந்த!



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் முக்கியஸ்தருமான ஏ.எச்.எம். அஸ் வர் வைத்தியாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களாக சுகவீனமுற்றிருந்த அவர், கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

இந்த நிலையில், அவரைச் சந்திப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வைத்திய சாலைக்குச் சென்றிருந்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் அஸ்வர், இலங்கை நாடாளுமன்றத்திலுள்ள மூத்த அரசியல்வாதிகளில் ஒருவர் என்பதுபோல, நாடாளுமன்ற நிலையியற் கட்டளைச்சட்டம் மற்றும் ஒழுங்குப் பத்திரம் ஆகியவற்றை தயாரிப்பு பணிகளில் ஆரம்ப நாள்களில் முக்கிய பங்காற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# ஐக்கிய மதங்களின் வருடாந்த தேசிய மாநாடு இம்முறை யாழில்!

யாழ்ப்பாணம்,ஓக.26
ஐக்கிய மதங்களின் ஒன்றியத்தின் (URI) வருடாந்த தேசிய மாநாடு இந்த வருடம் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை நான்கு நாள்கள் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் சர்வதேச மதத் தலைவர்களும், பிரதிநிதிகளும், உள்ளூர் பிரதிநிதிகளும், உறுப்பினர்களும் கலந்து கொள்வர்.

அது விடயமாக ஐக்கிய மதங்களின் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். மாவட்ட சர்வோதய நிலையத்தில் நடைபெறும். சர்வோதயம், தேசோதய சபை, சமாதான நீதிவான் அமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்களை இதில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# உயர் தொழில்நுட்ப நிறுவனம்: தற்காலிக பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஓக.26
யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் HND IT & HND in Engineering கற்கை நெறியை நிறைவு செய்த மாணவர்களிடமிருந்து தற்காலிக பயிற்சியாளர் (temporary Demonstrator) பதவிக்குவிண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தங்களால் சுய மாகத்தயாரிக்கப்பட்ட சுயவிவரக்கோவையை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம், இல. 665/2, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. (இ)

# வடகொரியாவுடனான சிறிலங்காவின் உறவில் நெருக்கமும் விரிசலும்!

வழிமூலம் - Sunday times
ஆங்கிலத்தில் - Chandani Kirinde
மொழியாக்கம் - நித்தியபாரதி

சிறிலங்காவிற்கும் வடகொரியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவு ஆரம்பத்திலிருந்தே விரிசலடைந்துள்ளது. வடகொரியாவுடனான இராஜதந்திர உறவு சிறிலங்கா வில் ஆட்சியிலிருக்கும் அரசின் கோட்பாட்டில் தங்கியிருக்கின்றது.

எனினும், கடந்த இரண்டு ஆண்டுகளாக வடகொரியாவுக்கு எதிராக சிறிலங்கா மிகக் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. குறிப்பாக வடகொரியாவின் அணுவாயுதத் திட்டங்கள் மற்றும் இதன் மனித உரிமை மீறல்களே வடகொரியாவுடனான சிறிலங்காவின் உறவு விரிசலடையக் காரணமாகும்.

வடகொரியாவால் தயாரிக்கப்பட்ட கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைத் திட்டத்தை சிறிலங்கா எதிர்த்ததுடன் கடந்த ஜூலை இறுதிப் பகுதியில் இதனைக் கண்டித்து ஊடக அறிக்கை ஒன்றையும் சிறிலங்கா வெளியிட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்தப் பிரச்சினையை சிறிலங்காவின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையில் முன்வைத்த போது, சிறிலங்கா அரசு மற்றும் அரசின் தலைவர் என்ற வகையில் வடகொரியாவுக்கு எதி ராக சிறிலங்கா அறிக்கை வெளியிடு வதற்கு முன்னர் அது தொடர்பாக தன்னிடம் தெரியப்படுத்தியிருக்க வேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்திருந்தார். வடகொரியா தொடர்பான சிறிலங்காவின் நிலைப்பாடு சீரற்றுள்ளது என்பதையே இந்தச் சம்பவம் சுட்டிக் காட்டுகிறது.

**இராஜதந்திர உறவில் ஏற்பட்டுள்ள விரிசல்**

அணுவாயுதப் பரிசோதனையில் ஈடுபடுவதை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள போதிலும் வடகொரியா தொடர்ந்தும் அணுவாயுதப் பரிசோதனையில் ஈடுபட்டு வருவது சிறிலங்கா மற்றும் வடகொரியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.



சிறிமா ஆட்சி காலத்திலும் தடுமாற்றம்

வடகொரியா அணுவாயுதப் பரிசோதனைகள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைப் பரிசோதனைகளைச் செய்வது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையால் வெளியிடப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக ஐ.நாவின் உறுப்பு நாடாக உள்ள சிறிலங்கா மதிப்பளிப்பதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹேஷினி கொலன்னே தெரிவித்துள்ளார்.

**வடகொரியா தொடர்பில் சிறிலங்காவின் அறிக்கைகள்**

வடகொரியா தொடர்பாக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சு இதுவரை ஐந்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. முதலாவதாக 2006லும் தொடர்ந்து 2013 மற்றும் 2016 இல் இரண்டு அறிக்கைகளும், இறுதியாக இவ்வாண்டு ஜூலையில் ஓர் அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

2006, 2013 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் வடகொரியாவின் அணுவாயுதப் பரிசோதனைகள் தொடர்பான சிறிலங்காவின் எதிர்ப்பை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிப்படுத்தியது. ஆனால் கடந்த ஆண்டு தொடக்கம் சிறிலங்காவின் இந்த நிலைப்பாடு மேலும் அதிகரித்துள்ளதையே இறுதியாக வெளியிட்ட அறிக்கை சுட்டிநிற்கின்றது.



2016 செப்ரெம்பரிலும் இவ்வாண்டு ஜூலை மாதத்திலும் சிறிலங்காவால் வெளியிடப்பட்ட வடகொரியா மீதான அறிக்கை மிகவும் கடுமையான எச்சரிக்கையாக உள்ளது. குறிப்பாக 'அனைத்துலக சமூகம் அணுவாயுதப் பரிசோதனைகள் தொடர்பில் ஒன்றிணைந்து தீர்வு காணவேண்டும். இல்லாவிட்டால் இது அனைத்துலக சமூகத்தின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் மிகப் பெரும் அச்சுறுத்தலாக எழும்' என சிறிலங்கா வெளிவிவகார அமைச்சால் வடகொரியாவிற்கு எதிராக வெளியிடப்பட்ட அண்மைய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடகொரியா தொடர்பாக ஐ.நா. பொதுச் சபையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பான வாக்கெடுப்பிலும் சிறிலங்கா நிலையற்ற தீர்மானத்தையே எடுத்துள்ளது. குறிப்பாக 2007 இல் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தில் சிறிலங்கா இதற்கு ஆதரவாகவும், 2008 மற்றும் 2009 இல் இடம் பெற்ற வாக்கெடுப்பை சிறிலங்கா புறக்கணித்ததுடன் 2014 இல் இடம்பெற்ற வாக்கெடுப்பில் தீர்மானத்தை எதிர்த்தும் சிறிலங்கா வாக்களித்தது.

**ஐ.நா. வாக்கெடுப்பு: சிறிலங்கா நிலைப்பாட்டில் தடுமாற்றம்**

வடகொரியா தொடர்பாக ஐ.நா. பொதுச்சபையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பான வாக்கெடுப்பிலும் சிறிலங்கா நிலையற்ற தீர்மானத்தையே எடுத்துள்ளது. குறிப்பாக 2007 இல் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தில் சிறிலங்கா இதற்கு ஆதரவாகவும், 2008 மற்றும் 2009 இல் இடம் பெற்ற வாக்கெடுப்பை சிறிலங்கா புறக்கணித்ததுடன் 2014 இல் இடம்பெற்ற வாக்கெடுப்பில் தீர்மானத்தை எதிர்த்தும் சிறிலங்கா வாக்களித்தது.



மீண்டும் 2015/2016 இல் வடகொரியாவின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து முன்வைத்த தீர்மானத்தை ஆதரித்தும் சிறிலங்கா வாக்களித்தது. 2014 இல் வடகொரியா மீதான தீர்மானத்தை சிறிலங்கா எதிர்த்து வாக்களித்திருந்தமைக்கு தனது நாட்டில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக ஐ.நாவின் அழுத்தங்களுக்கு உட்பட்டிருந்தமையே காரணமாகும்.

2014 இல் ஐ.நா. கூட்டத்தொடரில் கலந்து கொண்டிருந்த சிறிலங்காவின் பிரதிநிதி ஏன் வடகொரியா மீதான தீர்மானத்துக்கு சிறிலங்கா எதிர்த்து வாக்களித்தது என்பது தொடர்பாக விளக்கியிருந்தார். அதாவது, இவ்வாறான தீர்மானம் பயனற்றது எனவும் இந்த விவகாரத்தை பாதுகாப்புச் சபை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றிற்கு கொண்டு செல்வதற்கு உந்துதல் அளிப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது எனவும் ஐ.நா. கூட்டத் தொடரில் பங்கு கொண்ட சிறிலங்காவின் பிரதிநிதி குறிப்பிட்டிருந்தார்.

**வடகொரியா- சிறிலங்கா உறவில் திருப்பம்**

ஜூலை 1970 இல் வடகொரியா தனது தூதரகத்தை கொழும்பில் திறக்கும் அளவுக்கு இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவு நிலை பலம்பெற்றிருந்தது. எனினும், 1971 இல் ஜே.வி.பி. கிளர்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள தூதரகத்தை மூடுமாறும் அங்கிருந்த அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை அவர்களது சொந்த நாட்டிற்குச் செல்லுமாறும் வடகொரியாவிற்கு சிறிலங்கா அரசு கட்டளையிட்டது.

'சிலோனில் உள்ள வடகொரியாத் தூதரகத்தில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் சிறிலங்கா அரசின் சொந்த நலனுக்காக இங்கிருந்து வெளியேற வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது' என திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அப்போதைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏப்ரல் 17, 1971 இல் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அப்போது சிறிலங்காவில் ஜே.வி.பி. கிளர்ச்சி இடம்பெற்றதால் இக்கிளர்ச்சியில் ஈடுபடுவோருக்கு வடகொரியா உதவுகின்றது என்கின்ற சந்தேகத்தின் பேரிலேயே இவ்வாறானதோர் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

'சிறிலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிசக் கட்சி ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து ஐக்கிய முன்னணியின் கீழ் தேர்தலில் போட்டியிட்ட போது இவர்களது தேர்தல் பரப்புரையில் வெளிநாட்டுக் கோட்பாட்டில் மாற்றம் ஏற்படுத்தப்படும் எனக் கூறப்பட்டது.

இதன் காரணமாக ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்று நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் வடகொரியா மற்றும் கிழக்கு ஜேர்மன் ஆகிய இரண்டிற்கும் ஜனநாயக அடையாளம் வழங்கப்பட்டது' என முன்னணி வரலாற்றுத் துறைப் பேராசிரியர் கே. எம்.டி சில்வாஎழுதிய 'சிறிலங்காவின் வரலாறு' என்கின்ற நூலில் 'மொழியியல் தேசிய வாதம் மற்றும் ஒரு சமூக ஆராய்ச்சி' என்கின்ற உப தலைப்பில் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க...)




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

**ட்ரம்பின் உரை வெறுமனே ஆப்கானிஸ்தானுடன் மட்டும் சம்பந்தமானது அல்ல.**

திங்களன்று (21.08.2017) மாலை தேசியளவில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட ஓர் உரையில் ட்ரம்ப் வெளியிட்ட ஆப்கானிஸ்தான் குறித்த புதிய கொள்கை, பதினாறு ஆண்டுகள் தொடர்ச்சியான அமெரிக்க ஆக்கிரமிப்பில் பாதிக்கப்பட்ட ஒரு நாட்டுக்கு எதிராக பகிரங்கமான மற்றும் கட்டுப்பாடற்ற இராணுவ வன்முறையின் ஒரு பிரகடனமாகும்.




புஷ் நிர்வாகம் ஒக்ரோபர் 2001 இல் ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்க படையெடுப்பை தொடங்கியதில் இருந்து மிதமான மதிப்பீடுகளின்படி, 175, 000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மில்லியன் கணக்கானவர்கள் அவர்களின் வீடுகளில் இருந்து வெளியேற தள்ளப்பட்டுள்ளனர். புஷ், ஒபாமா மற்றும் இப்போது ட்ரம்பின் கீழ் அமெரிக்க இராணுவம்-மஜர்-ஐ-ஷரீப் இல் 800 தலிபான் கைதிகளின் நவம்பர் 2001 படுகொலையில் இருந்து, காக்காரெக் இல் திருமண விருந்தில் 48 நபர்களின் 2002 படுகொலை, 2015 இல் குண்டூஸில் எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு மையத்தில் 42 மருத்துவ உதவியாளர்கள் மற்றும் நோயாளிகளின் படுகொலைமற்றும் இந்த கடந்த ஏப்ரலில் நன்கர்ஹார் மாகாணத்தில் அமெரிக்கக் குண்டுகளிலேயே மிகப்பெரிய அணுசக்தி-அல்லாத ஆயுதமான மிகப்பெரிய இராணுவ வான்வெடி குண்டு




(MOAB) வீசியது வரையில்-எண்ணற்ற அட்டூழியங்கள் மற்றும் போர் குற்றங்களை நடத்தியுள்ளது.

**எதிரிக்கு எதிராக துரிதமாக மற்றும் முழுமையாக போர் நடத்துவதிலிருந்து பாதுகாப்புத்துறை செயலரை மற்றும் தளபதிகளைக் களத்தில் தடுக்கும்'' நடவடிக்கைகள் மீதான சகல தடைகளும் நீக்கப்படும்.**

அமெரிக்க இராணுவ கட்டளையகம் அவசியமென கோரும் எந்தளவிலான துருப்புகள் மற்றும் ஆதாரவளங்களையும் வழங்க ட்ரம்ப் வரம்பில்லா அதிகாரம் பெற்றிருப்பதால், இந்த வன்முறை இன்னும் அதிவிரைவாக தீவிரப்படுத்தப்படும். எந்தவொரு எதிர்ப்பையும் தோற்கடிக்க இராணுவத்திற்கு ''அவசியமான கருவிகள் மற்றும் ஈடுபடுவதற்கான விதிமுறைகளை'' அவர் வழங்கவிருப்பதாக ட்ரம்ப் அறிவித்தார். எதிரிக்கு எதிராக துரிதமாக மற்றும் முழுமையாக போர் நடத்துவதிலிருந்து பாதுகாப்புத் துறை செயலரை மற்றும் தளபதிகளைக் களத்தில் தடுக்கும்'' நடவடிக்கைகள் மீதான சகல தடைகளும் நீக்கப்படும்.


வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஆப்கான் மக்கள் மீதான முந்தைய படுகொலைகள் வரவிருப்பதோடு ஒப்பிடுகையில் ஒன்றுமில்லாமல் போகக்கூடும்.

எவ்வாறிருப்பினும் ட்ரம்பின் உரைவெறுமனேஆப்கானிஸ்தானுடன் மட்டும் சம்பந்தமானது அல்ல. அது, நடைமுறையில் உலகம் மீதான ஒரு போர் பிரகடனமாகும். ட்ரம்ப் பாகிஸ்தானை அச்சுறுத்தியதுடன் இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே மற்றும் இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையே அதிகரித்துவரும் மோதல்களுக்கு மத்தியில் பகிரங்கமாக இந்திய பக்கம் தரப்பெடுத்தார்.

ஆப்கான் போர் விரிவாக்கத்திற்கு நேட்டோ நாடுகள் அதிக துருப்புகள் மற்றும் ஆதாரவளங்களை வழங்க வேண்டுமென்ற ட்ரம்பின் கோரிக்கையில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள அதன் பெயரளவிற்கான கூட்டாளிகளுக்கு இடையே அதிகரித்து வரும் பதற்றங்கள் பிரதிபலித்தன.

**அவர் நிர்வாகத்தின் கீழ் ''நமது இராணுவத்திற்கு பல பில்லியன் டொலர்கள் கூடுதலாக செலவிடப்பட்டு வருகிறது. நமது அணுஆயுத தளவாடங்கள் மற்றும் தற்காப்பு ஏவுகணைகளுக்காகச் செலவிடப்படும் மிகப்பெரும் தொகைகளும் இதில் உள்ளடங்கும், என்றார்.**

நிர்வாகம், வட கொரியாவுக்கு எதிராக ஒரு முன்கூட்டிய தாக்குதலை தொடங்குவதற்கு விவாதித்து வருகின்ற நிலையில், இந்த உரை வழங்கப்பட்டது. என்ன திட்டமிடப்பட்டு வருகிறதோ அதுகுறித்த ஓர் அச்சுறுத்தலான மிரட்டலாக, ட்ரம்ப் அறிவிக்கையில், அவர் நிர்வாகத்தின் கீழ் ''நமது இராணுவத்திற்கு பல பில்லியன் டொலர்கள் கூடுதலாக செலவிடப்பட்டு வருகிறது. நமது அணுஆயுதத் தளவாடங்கள் மற்றும் தற்காப்பு ஏவுகணைகளுக்காகச் செலவிடப்படும் மிகப்பெரும் தொகை




களும் இதில் உள்ளடங்கும்.- என்றார்.

சகல விதமான பகட்டாரவார பேச்சுகளுக்குப் பின்னால், ஒழுக்கச் சிதைவினதும் அச்சத்தினதும் ஒரு கலவை ட்ரம்ப் உரையில் மேலோங்கி இருந்தது. அமெரிக்க ஆளும் வர்க்கம் ஒவ்வொரு இடத்திலும் அதன் நடப்பு எதிரிகளை அல்லது சாத்தியமான எதிரிகளைக் காண்கிறது.

அதிக குண்டுகள் வீசுவதன் மூலமாக மற்றும் அதிக மக்களைக் கொல்வதன் மூலமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் அதிகரித்துவரும் அதன் பொருளாதார, சமூக மற்றும் புவி அரசியல் நெருக்கடியைத் தீர்க்க முடியும் என்ற கருத்தில் பெரும்குழப்பத்தின் அம்சம் நிறைந்துள்ளது.

இந்தப் பிரமையானது அமெரிக்க ஆளும் வர்க்கத்திற்கு, சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பின்னர் இருந்து மத்திய கிழக்கு எங்கிலும், வட ஆபிரிக்காவில் மற்றும் அதற்கு அப்பாலும் 25 ஆண்டுகால முடிவில்லா போர்களில் ஒரு தோல்வி மாற்றி ஒரு தோல்வியையே உருவாக்கி உள்ளது.

அடுத்தடுத்து வந்த அமெரிக்க அரசாங்கங்கள் இரத்தந்தோய்ந்த வன்முறைமூலமாக ஆப்கானிஸ்தானில் கட்டுப்பாட்டை ஸ்தாபிப்பதில் தோல்வியடைந்துள்ளன என்பதும் இதில் உள்ளடங்கும். அமெரிக்க ஏகாதிபத்தியம், அதிகரித்தளவில் ரஷ்யா, சீனா மற்றும் ஜேர்மனி போன்ற அதன் மிகப்பெரிய போட்டியாளர்கள் மீது அதன் ஒருமுனைப்பைத் திருப்பி வருகிறது.

அமெரிக்க தொழிலாள வர்க்கத்தின் வடிவத்தில், அமெரிக்காவிற்குள்ளேயே அது அதன் மிகப்பெரிய எதிரியை எதிர்கொண்டுள்ளது என்பது குறித்தும் ஆளும் வர்க்கம் நன்குணர்ந்துள்ளது.

**வெளிவேஷத்திற்கு கூட காங்கிரஸின் மேற்பார்வையோ அல்லது ஒப்புதலோ இல்லாமல், எல்லா முடிவுகளும் இராணுவத்தால் எடுக்கப்பட உள்ளன. ட்ரம்ப் அவர் உரையை அமெரிக்க மக்களுக்கு வழங்கவில்லை. மாறாக படை சீருடை அணிந்த சிப்பாய்களுக்கும் மற்றும் இராணுவ ஒழுக்க சீலர்களுக்குமே வழங்கினார்.**

ட்ரம்பின் உரை மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் ஒரு ஜனாதிபதி-இராணுவ சர்வாதிகாரத்திற்கு ஒத்த அதன் வலியுறுத்தலாக இருந்தது.

என்ன திட்டமிடப்பட்டு வருகிறது. எத்தனை துருப்புகள் அனுப்பப்படுவார்கள் அல்லது எத்தனை காலத்திற்கு அவர்கள் அங்கே இருப்பார்கள் என்பது குறித்து எதுவும் அமெரிக்க மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியதில்லை என்ற நிலைப்பாட்டை ஜனாதிபதி ஒரு கொள்கையாகவே தாங்கிப் பிடித்திருந்தார்.

வெளி வேஷத்திற்கு கூட காங்கிரஸின் மேற்பார்வையோ அல்லது ஒப்புதலோ இல்லாமல், எல்லா முடிவுகளும் இராணுவத்தால் எடுக்கப்பட உள்ளன. ட்ரம்ப் அவர் உரையை அமெரிக்க மக்களுக்கு வழங்கவில்லை. மாறாக படை சீருடை அணிந்த சிப்பாய்களுக்கும் மற்றும் இராணுவ ஒழுக்கசீலர்களுக்குமே வழங்கினார்.

ட்ரம்ப் உரையின் மிக குறிப்பிடத்தக்க வசனங்கள் ஆரம்பத்திலேயே இடம்பெற்றிருந்தன. ஒரு பிளவுபட்ட தேசத்தைக் கட்டுப்படுத்துவதற்கான இன்றியமையாத சக்தியாக இராணுவத்தின் மீது துதி பாடலை வழங்கினார். இராணுவம் முற்றிலும் செம்மையான நல்லிணக்கத்திற்கு'' ஒரு கருவியாகும் என்று அவர் அறிவித்தார். ஒரு தேசமாக எதை நாம் அடிக்கடி மறக்கிறோம் என்பது சிப்பாய்களுக்குப் புரியும் என்றார். ''நமது வெளிநாட்டுப் போர்களில் சண்டையிட நாம் அனுப்பும் இளைஞர்களும் பெண்களும் நாட்டுக்குள்ளேயே சண்டையில்லா ஒரு நாட்டிற்குத் திரும்ப வேண்டியவர்கள்'' என்றார்.

(கேள்வி தொடரும்)




# சுதந்திர வேட்கை

**அத்தியாயம் - V**

## மரணத்தை எதிர்கொண்டோம்

நெல்வயலுக்கூடாக வரம்புமீது நடந்து போய்க் கொண்டிருந்தபோது, பாலாவுக்கு கால் சறுக்கியது. வயல் நீருக்குள்ளும் சேற்றுக்குள்ளும் கணைக்கால் புதைத்து எழுந்து வந்தார். வயல் வரம்பிலே அமர்ந்திருந்தோம். திடீரென்று நிலை தழும்பி விழுந்த தாக்கத்திலிருந்து தேறிக்கொண்டிருந்தபோது அச்சத்தில் பாலா எகிறிக் குதித்தார். ஒரு நீர்ப் பாம்பு அவருடைய காலைக் கடந்து அப்பால் நழுவிக்கொண்டிருந்தது. ஒருபுறம் பாம்புகளுடனும் நுளம்புகளுடனும் போராட வேண்டிய நிலை! மறுபுறம் வெளிச்சம் எங்கள் பக்கமாகப் பாய்ச்சப்படும்போது உடனே பதுங்க வேண்டிய நிலை. மக்களுடைய வளவுக்குள் அத்துமீறி நுழையும் படையினர் எம்மைத் தேடத் தொடங்கும்போது, ரோச் ஒளிகள் ஒன்றன்பின் ஒன்றாக வீடுகளில் வெளிச்சம் பாய்ச்சும். நாம் வயல் வரப்பிலே உட்கார்ந்திருந்து பார்த்துக்கொண்டிருக்க எமது கண் முன்னே எமக்கான தேடுதல் இரவின் இருளில் மணிக்கணக்காக ஒரே போக்கில் நடந்து கொண்டிருந்தது. காத்திருப்பதைத் தவிர எம்மால் வேறு எதுவும் செய்யமுடியவில்லை. நெல் வயலுக்கு அப்பால் உள்ள ஒரு பழுப்பு வண்ணக் கட்டடத்தைச் சுட்டிக் காட்டிய பாலா, இதுதான் பிரசித்தி பெற்ற கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி என்றார்.

இருள் கரைந்து வைகறை ஒளி அரும்பத் தொடங்க, எமது அடுத்த நகர்வைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதாயிற்று. உலங்குவானூர்திகள் மேலே வட்டமிடத் தொடங்க, பகல் வெளிச்சமும் நெல்வயலும் எமக்குப் பாதுகாப்பு அளிக்கமாட்டா. எனவே, கிங்ஸ்லி தமது வீடு சென்று நிலைமையை அறிந்துவரத் தீர்மானித்தார். அவருடைய அனுபவப்படி, தேடுதல் நடவடிக்கையை முடித்திருந்தால் படையினர் தங்கள் முகாமுக்குத் திரும்பியிருப்பார்கள். ஆனால், வெவ்வேறு பக்கங்களில் இருந்து வரும் ஒலிகளை வைத்து அனுமானிக்கும்போது, படையினர் இன்னமும் அங்கே இருக்கின்றனர் என எனக்குப்பட்டது.

காலை ஒளி பரவத் தொடங்க, நானும் பாலாவும் வயற்கரையை அடுத்த முள்ளுப் பற்றைகளுக்குள் கிங்ஸ்லியின் வருகைக்காகக் காத்திருந்தோம். சிறிது நேரத்தின் பின்னர் கிங்ஸ்லி வந்தபோது மனதுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. எமது சந்தேகத்தை அவர் உறுதிப் படுத்தினார். நாம் திரும்பி வரக் கூடும் என்ற எதிர்பார்ப்பில், இரவு முழுவதும் மருத்துவரின் வீட்டில், படையினர் காத்திருக்கிறார்கள். அவர்கள் பின்வாங்குவதுபோல பாவனை செய்து எம்மைத் திரும்பவும் கவர்ந்திழுத்து, பின் வீட்டைத் துரிதமாகச் சுற்றி வளைத்து எம்மைக் கைதுசெய்யத் திட்டம் இட்டிருப்பார்களோ என்றும் சிந்தித்தோம். ஆனால், கிங்ஸ்லியின் அனுமானத்தின்படி, அந்தத் தருணத்தில் அந்தப் பகுதியில் படையினர் இருக்கும் அசுமாத்தம் இல்லை. ஆகவே, வயல்காணியிலிருந்து தமது வீட்டுக்குப் போய், அடுத்து என்ன செய்வது என்பது பற்றி, அங்கிருந்து திட்டமிடுவதே நல்லது என்று அவருக்குத் தோன்றியது.

ஒரு புறம், தூக்கமற்ற களைப்பு, மறுபுறம் வயிற்றைக் குடையும் பசி. ஒரு குட்டித் தூக்கம் போட்டுவிட்டு, ஏதாவது சாப்பிட்டு விட்டு, தப்பிப் பிழைக்கும் எம் போராட்டத்தின் அடுத்த நகர்வு பற்றி அதன் பின் சிந்திக்கலாம் என்று கருதினோம். எதிர்நோக்கும் ஆபத்தைத் தற்காலிகமாக மனதில் இருந்து ஒதுக்கி விட்டு, வெற்றுக் கொட்டிலில் இருந்த கட்டிலில் படுத்துத் தூங்கினோம். கிங்ஸ்லியின் சகோதரி, சுடச் சுட தேநீர் கொண்டு வந்தார். எனது வாழ்நாளில் என்றுமே சுவைத்திராத, பால் இல்லா வெறுந்தேநீர் அது. பாலாவிடம் இருந்து கிளம்பிய ஒற்றைக் குறட்டை, அவர் ஆழ்ந்த தூக்கத்துக்குள் செல்லும் நிலையில் இருக்கின்றமையை உணர்த்தியது. எமது பாதுகாப்பை மறந்து நானும் ஆழ்ந்த நித்திரைக்குள் அமிழ்ந்து விடலாமா என்று கருதியபோது, எம்மை உதறவைக்கும் சொல் காற்றிலே மிதந்து வந்தது. 'ஆமி!' என்னைச் சுதாகரித்துக் கொண்டு எழுந்து ஜன்னல் ஊடாக உற்று நோக்கினேன். ஒரு புறத்திலிருந்து மறுபுறம் மக்கள் ஓடிக்கொண்டிருக்கின்றமையைப் பார்க்க எனது இதயம் உறைத்தது. ஏதோ பாரதூரமான ஒன்று நடந்து கொண்டிருப்பது தெளிவாகப் புரிந்தது. பாலாவை எழுப்பி, படையினர் வந்து விட்டார்கள் எனக் கூறிக் கொண்டிருக்கும் போது கிங்ஸ்லியும் உள்ளே ஓடிவந்து படையினர் மருத்துவரின் வீட்டுக்கு அருகே வந்துவிட்டமையால், நாம் உடனே வெளியேறவேண்டும் என அவசரப் படுத்தினார். அந்த வட்டாரம் மீண்டும் சுற்றி வளைப்புக்குள் உள்ளாகி இருந்தது.



> எம்மை உதறவைக்கும் சொல் காற்றிலே மிதந்து வந்தது. 'ஆமி!' என்னைச் சுதாகரித்துக் கோண்டு எழுந்து ஜன்னல் ஊடாக உற்று நோக்கினேன். ஒரு புறத்திலிருந்து மறுபுறம் மக்கள் ஓடிக்கோண்டிருக்கின்றமையைப் பார்க்க எனது இதயம் உறைத்தது. ஏதோ பாரதூரமான ஒன்று நடந்து கோண்டிருப்பது தேளிவாகப் புரிந்தது. பாலாவை எழுப்பி, படையினர் வந்து விட்டார்கள் எனக் கூறிக் கோண்டிருக்கும் போது கிங்ஸ்லியும் உள்ளே ஓடிவந்து படையினர் மருத்துவரின் வீட்டுக்கு அருகே வந்துவிட்டமையால், நாம் உடனே வேளியேற வேண்டும் என அவசரப் படுத்தினார். அந்த வட்டாரம் மீண்டும் சுற்றி வளைப்புக்குள் உள்ளாகி இருந்தது.

## சுற்றிவளைப்பில் இருந்து தப்பி ஓட்டம்

கிராமத்தவர் ஒருவர் வேகமாக வந்து, தமது சைக்கிளை கிங்ஸ்லியிடம் மனமுவந்து கையளித்தார். பாலா அதில் ஏறி நகரத் தயாரானார். அந்த நேரம், எமது இன்னொரு போராளியான சந்திரன், எங்கிருந்தோ ஓடிவந்து என்னை தமது சைக்கிளில் ஏறுமாறு கூறினார். சந்திரனும் அதே பகுதியைச் சார்ந்தவர். கிங்ஸ்லியின் நண்பர். தூரத்தில் ஒழுங்கை முடிவில் காக்கிச் சட்டைகளின் நகர்வைக் காணமுடிந்தது. என்மீது கரிசனை கொண்ட ஒரு கிராமப் பெண் முன்னே வந்து என் நிறத்தை மறைக்கும் நோக்கத்தோடு எனது தலையை ஒரு கரும் போர்வையால் போர்த்தினார். நிதானமாகச் செயற்படும் கிங்ஸ்லியின் சகோதரி, சுற்றி வளைப்பின் ஊடாக எமக்குப் பாதை திறக்கும் நோக்கத்தோடு எமக்கு முன்னே பிரதான வீதியை நோக்கி வேகமாகச் சென்றார். பெருந்தொகையான படையினர் அங்கே குவிந்திருந்தமையால் கிராம மக்கள் பதறியபடி நின்றார்கள். பிரதான வீதியால் கிங்ஸ்லியின் சகோதரி எட்டிப் பார்த்தார். அங்கே அவருக்குத் தெரிந்த ஒரு பெண்ணை அடையாளம் கண்டார். அந்தப் பெண், தமது சிநேகிதி ஒரு நெருக்கடியில் சிக்கியிருக்கின்றமையைப் புரிந்து கொண்டு, வீதியை எட்டிப்பார்த்து, இந்தியப் படையினர் வீதியில் இல்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டு, எம்மை முன்னேறுமாறு சைகைகாட்டினார். அவர் இன்னொரு பெண்ணிடம் கையசைத்து உசாவ, அவரும் பாதுகாப்பை உறுதிப் படுத்திக கொண்டு, எம்மைத் தொடர்ந்து முன்னேறுமாறு கை காட்டினார். துணிச்சலான இந்தப் பெண்கள், எழுந்தமானமாக, நிலைமையை அளவிட்டு வழி காட்டிய மையால், நாம் அகப்படாமல் தப்பினோம். அந்த வட்டாரத்தைச் சுற்றி நிறுவப்பட்ட மூன்று சுற்றி வளைப்பு வளையங்களில் முதல் வளையத்தை உடைத்துச் செல்ல அவர்களுடைய துணிச்சலே உதவியது. படையினரின் சுற்றி வளைப்பு தடைகளை அதிஷ்டவசமாகக் கடந்து கரவெட்டி கிழவித் தோட்டத்தில் உள்ள இந்துக் கோவிலில் எமது ஓட்டத்தை நிறுத்தினோம்.

(தொடரும்...)



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

76



# வடகொரியாவுடனான...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி.... )

## தூதரகம் திறப்பும் உடன் மூடலும்

தேர்தல் முடிவடைந்து ஐக்கிய மக்கள் முன்னணி வெற்றி பெற்று இரண்டு மாதங்களின் பின்னர், அதாவது ஜூலை 15, 1970 இல் வடகொரியா தூதரகம் கொழும்பில் திறக்கப்பட்டது. இந்தத் தூதரகம் திறக்கப்பட்டு ஓர் ஆண்டுக்குள் வடகொரியா தனது தூதரகத்தை மூடவேண்டும் எனவும் பணியாளர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் எனவும் இலங்கை அரசு உத்தரவிட்டது.

ஆனாலும், அதன் பின்னரும் இவ்விரு நாடுகளுக்கு இடையிலான உறவு நிலை நீடிக்கும் என இலங்கையின் அப்போதைய அரசு அறிவித்தது.

ஜே.வி.பி. கிளர்ச்சிவாதிகளுக்கு வடகொரியா உதவி செய்கின்றது என்ற சந்தேகத்தின் பேரிலேயே தூதரகத்தை மூடுமாறு உத்தரவிடப்பட்டது என திருமதி பண்டாரநாயக்க வின் செயலராக 1970-77 வரையான காலப்பகுதியில் பணியாற்றிய M.D.D.பீரிஸ் தெரிவித்தார்.

ஜே.வி.பி. கிளர்ச்சிக்கு எந்தவொரு வெளிநாட்டு சக்திகளின் உதவியும் பெறப்படவில்லை என விசாரணையின் போது ஜே.வி.பி. தலைவர் றோகன விஜயவீர தெரிவித்தார் என 1971 இல் இது தொடர்பான விசாரணைக் குழுவில் அங்கம் வகித்த இலங்கை குற்றப் புலன் விசாரணைத் திணைக்களத்தைச் சேர்ந்த ஓய்வுநிலை மூத்த காவற்றுறைக் கண்காணிப்பாளர் உபாலி செனவிரத்ன தெரிவித்தார்.

## ஜே.வி.பி. கிளர்ச்சியில் வெளிநாட்டுத் தலையீடு

'ஜே.வி.பி. கிளர்ச்சியில் வெளிநாட்டுத் தலையீடும் காணப்பட்டது என பல்வேறு வதந்திகள் பரப்பப்பட்டன. ஆனால், விசாரணையின் போது இதற்கான எவ்வித ஆதாரங்களும் கிடைக்கப்பெறவில்லை' என செனவிரத்ன தெரிவித்தார்.

ஜே.வி.பி. கிளர்ச்சிகளுக்கு எவ்வித வெளிநாட்டு உதவிகளும் கிடைக்கப் பெறவில்லை என உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், 'ஜே.வி.பி. கிளர்ச்சியில் ஈடுபட்ட சில கிளர்ச்சித் தலைவர்கள் வடகொரியாவில் சில பயிற்சிகளைப் பெற்றனர். அத்துடன், வெளிநாட்டு நாணயங்களும் இலங்கைக்குள் கொண்டுசெல்லப்பட்டு, இவை கறுப்புச் சந்தைகளில் மாற்றப்பட்டு ஜே.வி.பிக்கு வழங்கப்பட்டது' என தென்னாசிய நாடுகள் தொடர்பான அமெரிக்காவின் வெளியுறவுக் கோட்பாடு என்கின்ற நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனாலும் இதற்கான எவ்வித ஆதாரங்களும் கிடைக்கப்பெறவில்லை.

தனது ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கிளர்ச்சியில் வடகொரியா ஈடுபட்டது என்பதை ஏப்ரல் 25, 1971 அன்று அப்போதைய பிரதமர் திருமதி பண்டாரநாயக்கவால் வழங்கப்பட்ட வானொலி விவாதத்தின் போது மறைமுகமாகத் தெரிவித்திருந்தார்.

'இந்த நாட்டில் செயற்பட்ட தூதரகம் ஒன்று (அவர் பெயர் குறிப்பிடவில்லை) பயங்கரவாதிகளுக்கு ஆதரவுகளை வழங்கியிருந்தது. கிளர்ச்சிவாதிகள், கிளர்ச்சிகளுக்கு தயாராவதற்கு இந்தத் தூதரகம் பலமாக இருந்துள்ளது. இதனால் இந்தத் தூதரகத்தை உடனடியாக மூடுமாறும் நாட்டை விட்டு வெளியேறுமாறும் தூதுவரிடம் கேட்டிருந்தேன்' என சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவித்திருந்தார்.


வடகொரியாவுடன் இலங்கை நன்கு ஆலோசனை செய்யப்பட்ட வெளிநாட்டுக் கோட்பாட்டைப் பின்பற்றினால் அனைத்துலக மட்டத்தில் இலங்கையின் நிலை உயர்வடையும் எனவும் ஆனால், இலங்கையில் அண்மையில் வடகொரியாவின் அணுவாயுதப் பரிசோதனை தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கை அவசியமற்றதும் தீங்கு விளைவிப்பதாகவும் உள்ளதாக தனது பெயரை வெளியிட விரும்பாத, இலங்கையைச் சேர்ந்த ஓய்வுநிலை மூத்த வெளியுறவுத் துறை அதிகாரி தெரிவித்தார்.

'ஒவ்வொரு நாடும் அணுவாயுதங்கள் தொடர்பாகக் கவலை கொள்கின்றது. அணுவாயுதப் பரவல் தடை தொடர்பான சாசனத்தை முன்வைத்து எமது ஆதங்கங்களை நாங்கள் வெளிப்படுத்த முடியும். ஆனால், அதற்கும் அப்பால் வடகொரியாவை எச்சரிக்கும் அளவிற்கு நாம் செல்ல வேண்டிய தேவையில்லை' என அந்த அதிகாரி தெரிவித்தார்.

கொரிய குடாநாட்டில் நிலவிய குழப்பங்களைத் தணிப்பதற்கான பணியில் இலங்கை முன்னர் ஈடுபட்டது எனவும், அணிசேரா நாடுகளின் அமைப்பின் தலைமைப் பொறுப்பை இலங்கை வகித்த போது கொரியாவின் சுதந்திரத்துக்காகவும் அமைதியான ஒன்றிணைவுக்கான அழைப்பையும் இலங்கை விடுத்ததாகவும் கொழும்பில் 1976 இல் இடம்பெற்ற அணிசேரா நாடுகளின் அமைப்பின் ஐந்தாவது மாநாட்டின் நிறைவில் இது தொடர்பாக இலங்கையின் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.



யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் சேவையாற்றி கடந்த வாரம் ஓய்வு பெற்ற எம்.எஸ்.ஏ.அஸ்ரவ்வுக்கான பிரியாவிடை வைபவத்தில் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ்.அன்ரன், மௌலவி சுபியான், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினர். (இ-19)







யாழ்.நாச்சிமார் கோவில் மண்டபத்தில் ஞாயிறு மாலை யாழ். சுஜீவா வைத்தியசாலையின் ஆண்டுவிழாவில் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி கிளை முகாமையாளர் மழலைகளுக்கான சேமிப்பு புத்தகமும் பரிசுப் பொதியும் வழங்கினார். பாடசாலை மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களும் வழங்கப்பட்டன. (இ-19)











சுவிற்சர்லாந்தில் தமிழ் கத்தோலிக்க மக்கள் வருடாந்தம் கொண்டாடும் மடு மாதா திருவிழா இந்த வருடமும் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

மரியஸ்ரைன் மாதா திருத்தலத்தில் மடு அன்னையின் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அலங்கரிக்கப்பட்ட மடு அன்னையின் திருச்சொரூபம் பவனியாக எடுத்து வரப்பட்டு திருச்சொரூப ஆசீர்வாதம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழத்தின் மடு திருத்தளத்தின் நினைவுகளை மீட்கும் வகையில் ஆலயத்தின் வழிபாட்டு அமைப்புக்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருவிழாத் திருப்பலியினை திருகோணமலை மறைமாவட்டத்தின் அருட்தந்தை ரஜீவன்தலைமையேற்று நடத்தியிருந்தார். இக் கூட்டுத் திருப்பலியில் இலங்கை மற்றும் இந்தியாவின் பல துறவிகள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# புதிய கடற்படைத் தளபதியிடம் நட்டஈடு கோருகிறார் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட!

கொழும்பு, ஓக. 26

கடற்படைத் தளபதி ட்ரவிஸ் சின்னையாவிடம் 50 கோடி ரூபா நட்ட ஈடு கோரி முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட தனது சட்டத்தரணி ஊடாகக் கடிதம் அனுப்பியுள்ளார்.

குற்ற விசாரணைப் பிரிவில் கடற்படைத் தளபதி ட்ரவிஸ் சின்னையா வழங்கியுள்ள வாக்கு மூலம் ஒன்று தொடர்பிலேயே இவ்வாறு நட்டஈடு கோரி முன்னாள் கடற்படைத் தளபதி கடிதம் அனுப்பியுள்ளார்.


வசந்த கரன்னாகொட

தனக்கும், தனது குடும்பத்தினருக்கு எதிராகவும் அவதூறு பரப்பும் வகையில் பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளார் என கடற்படை தளபதி ட்ரவிஸ் சின்னையாவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை சித்திரவதை முகாமில் சந்தேக நபர்கள் கொலை செய்யப்பட்டனர் என்றும் இது குறித்து அப்போதைய கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட அறிந்திருந்தார் எனவும் தற்போதைய கடற்படை தளபதி ட்ரவிஸ் சின்னையா சுமத்தியுள்ள குற்றச்சாட்டு பொய்யானது என அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி குறிப்பிடப்பட்டு இந்த நிபந்தனை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


தளபதி ட்ரவிஸ் சின்னையா

இதன்படி, பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தியமைக்காக 50 கோடி ரூபா நட்டஈடு வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு வழங்கத் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இராணுவத்தினர் மீது வாள்வெட்டு ; சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைது !

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊற்றுப்புலம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய 6 பேரை பொலிஸார்கைது செய்துள்ளனர்.

ஊற்றுப்புலம் கிராமத்தில் ஏற்பட்ட சிறு பிரச்சினை முற்றியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் இராணுவத்தில் சேவையாற்றி விடுமுறையில் சென்ற இருவரே இந்த வாள் வெட்டுக்கு இலக்காகி கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த இருவரில் ஒருவர் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், மற்றையவர் இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் ஆறு பேர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் அடையாள அணிவகுப்பிற்குட்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார்முன்னெடுத்து வருகின்றனர். (க)

## வேறு நாடுகளில் நடப்பது போன்று இலங்கையில் கிளர்ச்சிகள் கிடையா!

### அமைச்சர் நவீன் திஸாநாயக்க



இலங்கையில் கிளர்ச்சிகள் கிடையா என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற இளைஞர்சக்தி நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வேறு நாடுகளுடன் ஒப்பீடு செய்யும்போது இலங்கையில் பெரியளவில் கிளர்ச்சிகள் இடம் பெறுவதில்லை.

நாட்டின் இருதயம் போன்றவர்களே இந்த இளைஞர் சமூகத்தினர். தலைவர்கள் அவர்களுக்கு உரிய வளங்களை வழங்கினால் நாடு முன்னோக்கி நகரும். இளைஞர் கழகங்களின் ஊடாக இளம் தலைவர்கள் உருவாகின்றனர்.

இவ்வாறான தலைவர்கள் முன் மாதிரியாகச் செயற்பட வேண்டும். பிரதேச சபை, பிரதேச செயலகம் போன்றவற்றில் ஏதேனும் ஒரு பணியைச் செய்ய வேண்டியேற்பட்டால் பணம் கொடுக்க வேண்டியுள்ளது.

இளைஞர் யுவதிகளின் கைகள் சுத்தமாக இருக்க வேண்டும், அவர்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

ஏனெனில், அவர்களே நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்றுக் கொள்ள உள்ளவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## பண்டாரவன்னியனின் நினைவு தினம் வவுனியாவில்!



வவுனியா, ஓக. 26

வவுனியாவில் தேசியவீரன்பண்டாரவன்னியனின் ஞாபகார்த்த நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுஷ்டிப்பு நேற்றுக் காலை வவுனியாவில் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள அவரின் நினைவுத் தூபிக்கு அருகில் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, நினைவுத் தூபியை நிறுவிய வவுனியா சட்டத்தரணி மு.சிற்றம்பலம் தலைமையில் மலர் மாலை அணிவித்து ஞாபகார்த்த நினைவு அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பி.றோஹன புஷ்பகுமார, வட மாகாணசபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன் உட்பட பலரும்கலந்துகொண்டனர். (க-100)

## சில பிரச்சினைகளை கடவுளே வந்தாலும் தீர்க்க முடியாது என்கிறார் அமைச்சர் ஹக்கீம்!

அரசிலுள்ள கட்சிகளிடையே காணப்படும் பேதங்களை கடவுளே வந்தாலும்தீர்க்க முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கடுவெலயில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கையிலேயே அமைச்சர் ஹக்கீம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் சுஜீவ சேமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்துக்கும் இடையில் கருத்து மோதல்கள் இடம்பெற்றன. இதன் பின்னர் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

பிரதானகட்களிடையே காணப்படும் கருத்து முரண்பாடுகளைஇன்றும் நாம் மேடையிலும் கண்டோம். இது தவிர்க்க முடியாதது. இதுதான் யதார்த்தம் எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

## தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ள பதவிவிலகுகின்றனர் திருடர்கள்!

### முன்னாள் எம்.பி.வசந்த சமரசிங்க தெரிவிப்பு



திருடர்கள்தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள பதவிவிலகுகின்றனர் என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு திருடர்களை பாதுகாக்கும் நோக்கிலேயேசெயற்பட்டுவருகிறது.

அரசு ஜனவரி 8 வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சிரத்தைக் காட்டவில்லை. அரசின் இந்த நடவடிக்கைக்காக ஜனாதிபதியும் பிரதமரும் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்.

இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு அரசு தண்டனை வழங்குவதற்கு முனைப்பு காட்டாது என்றும் அவர்களை தண்டனையிலிருந்து தப்பிக்கச் செய்வதில் கூடுதல் ஆர்வம் காட்டி வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தாவிட்டால் ஜனாதிபதியிடம் முறையிடுவோம்!

## ஸ்டாலின் தெரிவிப்பு



சென்னை.ஓக.26

நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தாவிட்டால் ஜனாதிபதியிடம் முறையிடுவோம் என்று தி.மு.க. செயல் தலைவரும், தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. செயல் தலைவரும், தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான மு.க. ஸ்டாலின் நேற்று முன்தினம், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தவை வருமாறு-

எதிர்வரும் தேர்தலில் எங்கள் தலைமையில் பெரிய கூட்டணி அமையும் வாய்ப்புகள் உள்ளன. அது பற்றி தேர்தல் நேரத்தில் தெரியவரும்.

அரசு மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த ஆளுநர் இதுவரைஉத்தரவிடாமல்இருக்கின்றார்.

ஏற்கனவே 19 சட்டமன்ற உறுப்பினர்கள் எடப்பாடி பழனிச்சாமி அரசுமீது நம்பிக்கை இல்லை, எனவே, முதலமைச்சரை மாற்ற வேண்டும் என்று ஆளுநரிடம் தனித்தனியாகக் கடிதம் கொடுத்து இருக்கின்றார்கள். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தி.மு.க. சார்பில், இந்த அரசு பெரும்பான்மை நடத்தக்கூடிய வகையில் உடனடியாகச் சட்டசபையைக் கூட்ட உத்தரவிட வேண்டுமென்று ஆளுநருக்கு, நான் கடிதம் அனுப்பி இருக்கிறேன்.

அந்தக் கடிதம் அனுப்பப் பட்டு 3 அல்லது 4 நாள்கள் கடந்தும் உரிய விளக்கமோ, பதிலோ எங்களுக்கு வரவில்லை. எனவே, இன்னும் ஓரிரு நாள்கள் பொறுத்து இருந்து பார்த்துவிட்டு, அப்போதும் பதில் வரவில்லை என்று சொன்னால், ஜனாதிபதியிடம் இதுகுறித்து முறையிடும் சூழ்நிலை உருவாகும். தேவைப்பட்டால் நீதிமன்றத்தையும் நிச்சயம் நாடுவோம்.

டி.என்.பி.எஸ்.சியில் நடைபெற்ற முறைகேடுகளை வெளிப்படுத்திய தனியார் தொலைக்காட்சியைத் தடை செய்து, பல விதமான நெருக்கடிகளை அரசு கொடுத்து வருகிறது. எடப்பாடி ஆட்சியில் இதுபோன்ற செயல்கள் சாதாரணமாக நடைபெற்று வருகின்றன.

அதனால் தான் இந்தக் குதிரை பேர ஆட்சியை அப்புறப் படுத்த வேண்டுமென்று நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஊடகங்கள் இந்தச் செய்தியை மக்களுக்குவெளிப் படுத்தவேண்டும். - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### ஐதராபாத் உணவு விடுதியில்

## வாய்க்கு ருசியாக கேட்ட உப்புக்கும் கட்டணம் வசூலித்ததால் சர்ச்சை!

தெலுங்கானா மாநிலத்தின் ஐதராபாத்தில் உள்ள உணவு விடுதி ஒன்றில், வாடிக்கையாளர் கூடுதலாக கேட்ட உப்புக்கு ஒரு ரூபா கட்டணம் வசூலித்தது சர்ச்சையை ஏற்படுத்தியது.

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் சோமாஜிகுடா என்ற இடத்தில் ராஜ்பவன் சாலையில் உணவு விடுதி ஒன்று உள்ளது. அவினாஷ் சேதி என்பவர் தன் குடும்பத்தின ருடன் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு உணவு சாப்பிட அந்த உணவு விடுதிக்குச் சென்றுள்ளார்.

உணவுக்கு முன் வாங்கிய எலுமிச்சை கலந்த சோடாவில் உப்பு சற்றுக் குறைவாக இருந்தது. இதனால் அவர் சிறிது உப்பு சேர்க்கும்படி கேட்டுள்ளார். அதன்பின் குடும்பத்தினர் அனைவரும் சாப்பிட்டு முடித்தனர். உணவுக்கான சிட்டையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

அந்தச் சிட்டையில் கூடுதலாக சேர்க்கப்பட்ட உப்புக்கும் ஒரு ரூபா கட்டணம் என போடப்பட்டு இருந்தது. இதுதொடர்பான சிட்டையின் படங்கள் உள்ளூர் சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி பரபரப்பை ஏற்படுத்தியது.

# வெள்ளத்தில் மூழ்கிய பாடசாலைகள் படகில் பாடம் பயிலும் மாணவர்கள்!

திஸ்பூர்.ஓக.26

அசாமில் ஏற்பட்ட வெள்ளத்தால் 23 ஆயிரம் பாடசாலைகள் மூழ்கியுள்ளமையால் படகின் மூலம் மாணவர்கள் பாடம் பயில்கின்றமை அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



அசாமில் ஏற்பட்ட வெள்ளத்தால் கிட்டத்தட்ட 23 ஆயிரம் பாடசாலைகள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் மாணவர்களின் கல்வி வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு ஜாய் என்ற தொண்டு நிறுவனம், பார்பேடா மாவட்டத்தில் மிதக்கும் படகுகள் மூலம் மாணவர்களுக்கு வகுப்புகளை நடத்தி வருகின்றது.

அந்த நிறுவனத்தின் ஊழியரான ஜாகிதுல் இஸ்லாம் இது குறித்து கூறுகையில், படகில் வகுப்பு எடுக்கும் முறையை 6 மாதத்திற்கு முன்பே தொடங்கி விட்டோம். இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருக்கும் எனத் தெரிவித்தார்.



மேலும், பல கிராமங்களில் உள்ள மாணவர்கள் வீடுகளிலிருந்து படகின் மூலம் அழைத்து வரப்பட்டு படகிலேயே பாடம் நடத்தப்படுகிறது. இந்த வகுப்பு 2 மணி நேரம் நடத்தப்படுகின்றது.

இந்த வகுப்புகள் மூலம் மாணவர்கள் தங்கள் படிப்பைத் தடையின்றித் தொடருகின்றார்கள் என்று அந்தத்தொண்டுநிறுவனம் தெரிவித்துள்ளது.

# லடாக் அருகே வீதி; சீனா கண்டனம்!

ஜம்மு காஷ்மீர் மாநிலம் லடாக்கில் உள்ள பான்காங் ஏரியின் அருகே இந்தியா வீதி அமைத்து வருவதற்குச் சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் சிக்கிம் மாநிலத்தில் உள்ள டோக்லாமில் சீனபடைகள் ஊடுருவலைத் தடுக்கும் வகையில் இந்திய இராணுவத்தினர் எல்லையில் குவிக்கப்பட்டுள்ளனர். அதேபோல், சீனபடையினரும் தங்களது இராணுவத்தினரை அங்கு நிறுத்தியுள்ளதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இது கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக நீடித்து வருகின்றது.

இந்நிலையில், காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் இருக்கும் பான்காங் ஏரி அருகே சாலையமைப்பதற்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சீன வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் கூறுகையில், லடாக்கில் உள்ள பாங்டாங் ஏரியின் அருகே இந்திய அரசு சாலை பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இதனால், அந்த பகுதியில் அமைதி ஏற்படும் வாய்ப்புகளே இல்லை. இந்தியாவின் இந்த நடவடிக்கைக்கு சீனா கடும் கண்டனங்களை தெரிவித்துக்கொள்கிறது என்று தெரிவித்துள்ளார்.

(ப)

# இந்தியா, நேபாளம் இடையே 8 ஒப்பந்தங்கள் கைச்சாத்து!

## பிரதமர் மோடி அறிவிப்பு



புதுடில்லி.ஓக.26

இந்தியா, நேபாளம் இடையே போதைப்பொருள் ஒழிப்பு, மின்சக்தி பரிமாற்றம் உட்பட எட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன என நேபாள பிரதமருடனான சந்திப்பிற்கு பின்னர் மோடி தெரிவித்தார்.

நேபாள பிரதமர் ஷேர் பகதூர் தியூபா 5 நாள் அரசு முறை பயணமாக நேற்றுமுன்தினம் இந்தியா வந்துள்ளார். அவருடன், 4 அமைச்சர்களும், 12 சட்ட சபை உறுப்பினர்கள் கொண்ட குழுவும் வந்துள்ளது. நேபாள பிரதமருக்கு ஜனாதிபதி மாளிகையில், உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தியூபா ஏற்கனவே 1996, 2004 மற்றும் 2005ஆம் ஆண்டுகளிலும் நேபாள பிரதமராக இந்தியாவுக்கு வந்துள்ளார்.

இந்த பயணத்தின் இரண்டாம் நாளான நேற்று, தியூபா, இந்திய பிரதமர் மோடியை சந்தித்துப் பேசினார். சந்திப்பிற்கு முன்பு இருநாடுகளிடையேயான மின்வழிப் பாதைகளை இருநாட்டு பிரதமர்களும் கூட்டாக ஆரம்பித்து வைத்தனர். இந்த சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கிடையேயான உறவைப் பலப்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

சந்திப்பிற்கு பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய மோடி, இரு நாடுகளிடையே எட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

# ட்ரம்பின் கொள்கையை நிராகரித்த பாகிஸ்தான்!



ஆப்கானிஸ்தான் மற்றும் தெற்காசியாவுக்கான அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் புதிய கொள்கையை ஏற்கமுடியாது என பாகிஸ்தான் தேசிய பாதுகாப்புக் குழு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் மற்றும் தெற்காசியாவுக்கான அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் புதிய கொள்கையை ஏற்க முடியாது என பாகிஸ்தான் தேசிய பாதுகாப்புக் குழு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் மற்றும் தெற்காசியாவுக்கான புதிய கொள்கையை சமீபத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டார். அதில், ஆப்கானிஸ்தானில் தீவிரவாதத்தை வளர்க்கும் பணியில் பாகிஸ்தான் ஈடுபட வேண்டாம் என ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார். மேலும், தீவிரவாதம் குறித்த இரட்டைநிலைப் பாட்டை பாகிஸ்தான் கைவிட வேண்டும் என வும் அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில், அமெரிக்காவின் புதிய தெற்காசிய கொள்கை குறித்து விவாதிப்பதற்காக பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் பிரதமர், ஆளுநர், எதிர்க்கட்சித் தலைவர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். இதில், ஆப்கானிஸ்தானில் தீவிரவாதத்தை பாகிஸ்தான் வளர்ப்பதாக அமெரிக்காவால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

# சொகுசுக் கப்பல் கவிழ்ந்து விபத்து!

பிரெசில்லா,ஓக.26

பிரேஸில் நாட்டின் பஹியா மாநிலத்தில் உள்ள கடல்பகுதியில் 130 பயணிகளுடன் சென்ற சொகுசு கப்பல் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் பலியாகினர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

பிரேஸில் நாட்டின் கடலோர மாநிலமான பஹியாவில், நேற்று 130 பயணிகளுடன் சொகுசு கப்பல் சென்றுள்ளது. நடுக்கடலில் சென்று கொண்டிருக்கும் போது திடீரென கப்பல் எதிர்பாராத விதமாகக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 22 பேர் பலியாகினர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடற்படையினரால் 20 இற்கும் அதிகமானோர் மீட்கப்பட்டுள்ளனர் எனவும், மீதம் உள்ளவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது எனவும் தகவல்கள் தெரிவிக்




கின்றன. நேற்றுமுன்தினம் அந்நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள பார் மா நிலத்தில் 70 பயணிகளுடன் சென்ற படகு விபத்துக்குள்ளானதில் 21 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

படகு விபத்தில் பலியானவர்களுக்காக அந்த மாநிலத்தில் மூன்று நாள்கள் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

ஒரே வாரத்தில் இரண்டு படகு விபத்துக்கள் நடந்துள்ளதால், இது குறித்து விசாரணை நடத்த அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (ப)

# கிளர்ச்சியாளர் மோதல்:

## 5 பொலிஸாருடன் 12 பேர் பலி!

யாங்கூன்.ஓக.26

மியன்மாரில் ரோஹிங்யா முஸ்லிம் கிளர்ச்சியாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 5 பொலிஸார் உட்பட 12 பேர் பலியாகியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மியன்மாரின் வடக்குப் பகுதியான ரக்கினேவில் சிறுபான்மை ரோஹிங்யா இன முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். வங்காளதேசம் நாட்டில் இருந்து குடிபெயர்ந்து மியன்மாரில் பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள்தொகையைக் கொண்டவர்களாக இருக்கும் இவர்களில் சிலர், கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து ஆட்சியாளர்களின் ஒடுக்கு முறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இராணுவ நடவடிக்கைக்குப் பயந்து சுமார் 87 ஆயிரம் ரோஹிங்யா முஸ்லிம்கள், வங்கதேசத்திற்கு தப்பியோடி உள்ளனர்.

இந்நிலையில், பொலிஸாருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் சுமார் ஐந்து பொலிஸாரும், ஏழு கிளர்ச்சியாளர்களும் கொல்லப்பட்டனர் என்று அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

# ஐ.எஸ். தீவிரவாதத் தாக்குதல் 34 இராணுவ வீரர்கள் சாவு!



டமாஸ்க்ஸ்.ஓக.26

சிரியாவில் கூட்டுப்படையினர் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 34 பேர் பலியாகி உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரியாவில் அதிபர் பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஜிஹாதி குழுவினர் நாட்டின் பல பகுதிகளைக்கையகப்படுத்தி, தங்களது ஆதிக்கத்தின்கீழ் வைத்து நிர்வகித்து வருகின்றனர். இதுதவிர, ஐ.எஸ். தீவிரவாதிகளும் சில பகுதிகளைக் கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். இந்த குழுக்களையும் வேட்டையாட அமெரிக்க விமானப் படையின் துணையுடன் அந் நாட்டு முப்படைகளும் தீவிரமாகப் போரிட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற சண்டையில் ஐ.எஸ். தீவிரவாதிகள் சில பகுதிகளைக் கூட்டுப்படையினரிடம் இருந்து கைப்பற்றினர்.

இந்நிலையில், ராகா மாகாணத்துக்கு கிழக்குப் பகுதியில் கூட்டுப் படையினர் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 34 இராணுவ வீரர்கள் பலியாகி உள்ளனர் என அங்குள்ள மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. (ப)

# சியரா லியோன் நிலச்சரிவு

மேற்கு ஆபிரிக்க நாடான சியரா லியோனில் கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 500 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும், 810 இற்கும் மேற்பட்டவர்கள் மாயமாகியுள்ளனர் எனவும் அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான சியரா லியோனில் கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 500 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும், 810 இற்கும் மேற்பட்டவர்கள் மாயமாகியுள்ளனர் எனவும்



500 பேர் சாவு; 810 பேர் மாயம்!

அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள் ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான சியரா லியோனில் கடந்த சில வாரங்களாகக் கனமழை பெய்து வருகின்றது.

இதனால், அந்த நாட்டின் தலைநகரில் உள்ள மலைப் பகுதியில் பெரிய நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணில் புதைந்துள்ளன எனவும், 300 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியிருக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், 500 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகி உள்ளனர் என அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. மேலும், 800 இற்கும் அதிகமானோரின் நிலை இன்னும் தெரியவில்லை எனவும் அறிவித்துள்ளது.

பலியானவர்களில் 159 குழந்தைகளும் அடக்கம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. மாயமானவர்களின் கதி என்னவென்று தெரியாத நிலை அங்கு ஏற்பட்டுள்ளது. இதனால், மீட்ப்புப்பணிகளுக்காக சர்வதேச உதவிகளை அந்நாட்டின் அதிபர் பட்மடா கமாரா கோரியுள்ளார். (ப)

காலைக்கதிர் Kalaikkathir



# எச்.ஐ.வி. நோயுடன் சாதித்த ஆணழகன்!

மணிப்பூரைச் சேர்ந்த பிரதிப் குமார் சிங், எச்.ஐ.வி. நோயுடன் உலக ஆணழகன்சம்பியன்ஷிப்போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

உலக ஆணழகன் சம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றவரும், 'மிஸ்டர் தெற்கு ஆசியா' போட்டியில் மகுடம் சூடிய வருமான மணிப்பூரைச் சேர்ந்த பிரதிப்குமார் சிங் பற்றிய சுயசரிதை புத்தகம் வெளியாகி உள்ளது.

அந்தப் புத்தகத்தில் பிரதிப்குமார், 'நான் எச்.ஐ.வி. நோயால் (எய்ட்ஸ்) பாதிக்கப்பட்டது குறித்து வெளிப் படையாகத் தெரிவித்தமைக்குக் காரணம், எதிலும் உண்மையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத் தால் தான்.

2000ஆம் ஆண்டு மார்ச் முதல் 2002ஆம் ஆண்டு வரை எனது வாழ்க்கையில் கடினமான கால கட்டமாகும். ஆனாலும், மனம் தளர வில்லை. வைத்தியர்களின் அறி வுரையையும் மீறி கடினமான உடற் பயிற்சிகளை மேற்கொண்டு மீண் டும் போட்டிகளில் பங்கேற்று



சாதித்துக் காட்டினேன்'என்று கூறி யுள்ளார்.


இவர், இளம் வயதில் போதை பழக்கத்துக்கும் அடிமையாகி இருந் தமை குறிப்பிடத்தக்கது. 45 வயதான பிரதிப்குமார் தற்போது மணிப்பூர் அரசின் விளையாட்டு மற்றும் இளை ஞர் நலத்துறையில் உடற் தகுதி நிபுணராக பணியாற்றி வருகிறார்.

# பட்மிண்டன் உலக சம்பியன்ஷிப்: காலிறுதியில் பி.வி. சிந்து

பட்மிண்டன் உலக சம்பியன் ஷிப் தொடரில் கடும் போராட்டத் திற்குப் பின் ஹொங்கொங் வீராங் கனையை வீழ்த்தி பி.வி. சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஸ்கொட்லாந்தில் உள்ள கிளாஸ் கோவில் பட்மிண்டன் உலக சம் பியன்ஷிப் தொடர் நடைபெற்று வருகிறது. இன்று நடைபெற்ற பெண்களுக்கான காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் வீராங்கனை பி.வி. சிந்து ஹொங் கொங்கைச் சேர்ந்த செயுங் நிகன் என்பவரை எதிர்கொண்டார்.

பி.வி. சிந்துவிற்கு ஹொங் கொங் வீராங்கனை, கடும் சவா லாக விளங்கினார். முதல் செட்டை 19:21 என பி.வி. சிந்து இழந்தார். ஆனால், 2 ஆவது செட்டில் ஆக் ரோஷமான ஆட்டத்தை வெளிப் படுத்தினார். இருந்தாலும் ஹொங் கொங் வீராங்கனை, சிந்துவிற்கு எல்லா வகையிலும் ஈடுகொடுத்து விளையாடினார். இறுதியில் பி.வி.



சிந்து 23:21 என கடும் போராட்டத்திற் குப்பின் அந்த செட்டைக்கைப் பற்றினார். அதே வேகத்தில் 3ஆவது செட்டை 21:17 எனக் கைப்பற்றி ஹொங் கொங் வீராங்கனையை வீழ்த்தினார்.

83 நிமிடங்கள் நீடித்த இந்த போட்டி யில் பி.வி. சிந்து வெற்றி பெற்று காலி றுதிக்கு முன்னேறியுள்ளார்.

வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த பிறிமியர் லீக் 20 : 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி முதற்சுற்று ஆட்டங்கள்

# வாமணனின் பந்து வீச்சால் ஜொலிஸ்ரார்ஸ் வெற்றி

(கங்கா)

வாமணனின் பந்துவீச்சு ஸ்ரான்லி அணியை குறைந்த ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்த, சந்தோஸ் உள்ளிட்ட முன்வரிசை துடுப் பாட்ட வீரர்களின் துடுப் பாட்டமும் பலம்சேர்க்க, ஜொலி ஸ்ரார்ஸ் அணி இலகுவான வெற்றி யொன்றைப் பதிவுசெய்தது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மை யில் நடைபெற்ற முதற்சுற்று ஆட்டமொன்றில் ஜொலிஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து ஸ்ரான்லி அணி மோதியது.


நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்ரான்லி அணி, முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது. ஸ்ரான்லி அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர், சுதர்சன் ஒரு பக்கத்தில் நம்பிக்கையளித்தார்.

எனினும், மறுபக்கத்தில் சீரான இடைவெளியில் விக்கெட்கள் வீழ்ந்த வண்ணம் இருந்தன.

ஸ்ரான்லி அணி, 17.2 ஓவர் களில் 111 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் சுதர்சன் 47 ஓட்டங்கள், கண்ணராஜ் 21 ஓட் டங்கள், கலை 12 ஓட்டங்களை யும் பெற்றுக்கொடுத்தனர். மற்றைய எந்த வீரர்களும் இரண்டை இலக்க ஓட்டங்களைத் தாண்ட வில்லை.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார்ஸ் அணி சார்பாக வாமணன் 4 ஓவர் கள் பந்துவீசி 19 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டு களையும், துவாரகன் மற்றும் மது சன் ஆகியோர் தலா 2 விக்கெட் டுகளையும் கைப்பற்றினர்.

112 ஓட்டங்கள் என்ற வெற்றி யிலக்கை நோக்கி பதிலெடுத் தாடிய ஜொலிஸ்ரார் அணிக்கு, ஆரம்ப இணைப்பாட்ட ஜோடி யான சந்தோஸ் – துவாரகன் ஜோடி, 50 ஓட்டங்களைப் பகிர்ந்து நம் பிக்கையளித்தது.




தொடர்ந்து வந்த வீரர்களும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட, ஜொலி ஸ்ரார்ஸ் அணி 14 ஓவர் களில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந் தது. துடுப் பாட்டத்தில் சந்தோஸ் 40 ஓட் டங்கள், மதுசன் 22 ஓட் டங்கள், கஜன் மற்றும் துவாரகன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 25 மற்றும் 19 ஓட்டங் களையும் பெற்றுக்கொடுத்தனர்.

# ரேரோன் அணிக்கு இலகுவான வெற்றி!

(கங்கா)

ரேரோன்அணி,விங்ஸ் அணியை 54 ஓட்டங் களால் வீழ்த்தி இலகு வெற்றியொன்றைப் பெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல் லூரி மைதானத்தில் அண்மையில் நடை பெற்ற முதற்சுற்று ஆட் டத்தில்விங்ஸ் அணியை எதிர்த்து ரேரோன் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற ரேரோன் அணி, முதலில் துடுப்பெடுத் தாடக் களமிறங்கியது. 20 ஓவர்களில் 8 விக் கெட்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற் றது. துடுப்பாட்டத்தில் திலுக் சன் 26, டினோ 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்த னர்.

பந்துவீச்சில் விங்ஸ் அணி சார்பாக, வின்ஸ ரன், யதுசன், ஜபார்ஸன் ஆகியோர் தலா 2 விக் கெட்டுகளைக் கைப்பற் றினர்.

155 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் கள மிறங்கிய விங்ஸ் அணி, 20 ஓவர்களில் 7 விக் கெட்களை இழந்து 100 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் ஜபார்ஸன் 32 ஓட்டங் களைப் பெற்றுக்கொடுத் தார்.

பந்துவீச்சில் ரேரோன் அணி சார்பாக உதயா, டிலுக்ஸன் ஆகியோர் தலா2விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

(ப)

# ஜனோசனின் அதிரடி ஆட்டத்தால் சென்றலைட்ஸுக்கு வெற்றிக்கனி!

(கங்கா)

ஒரு கட்டத்தில் போட் டியை முழுமையாகக் கைவிட் டிருந்த சென்றலைட்ஸ் அணிக்கு, ஜனோசனின் பொறுப்புடன் கூடிய அதிரடி ஆட்டம் கைகொடுக்க, மிகப் பெரிய ஓட்ட எண்ணிக் கையை எட்டிய சென்ற லைட்ஸ் அணி, இலகுவான வெற்றியைத் தமதாக்கியது.

யாழ்ப்பாணம் மத்திய கல் லூரி மைதானத்தில் அண்மை யில் நடைபெற்ற முதற்சுற்று ஆட்டத்தில் சென்ற லைட்ஸ் அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியா அணி மோதி யது.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்றலைட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத் தாடக் களமிறங்கியது. ஆரம்பத்திலேயே அடித்தாட முற்பட்டு, அடுத்தடுத்து விக் கெட்டுகளைப் பறி கொடுத் தது.

7.3 ஓவர்களில் 64 ஓட்டங் களுக்கு 6 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து ஆட்டத்தை கைவிட்ட நிலையில் இருந் தது.இந்நிலையில், களம்புகுந்த ஜனோசன் ஆட்டத்தின் போக்கை அப்படியே மாற்றி விட்டார். அதிரடியாக ஆடிய ஜனோசன் அரைச்சதம் கடந் தார். கூடவே பின்வரிசை வீரர்களும் தம் பங்கிற்குக் கைகொடுக்க இந்தச் சுற்றுப் போட்டியின் அதிகூடிய ஓட்டத்தை சென்றலைட்ஸ் அணி பெற்றுக்கொண்டது.

20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. துடுப் பாட்டத்தில் ஜனோசன் 4 சிக் ஸர்கள், 8 பவுண்டரிகள் அடங்கலாக 69 ஓட்டங்களை யும், ஜூலியஸ் கலிஸ்ரன் 35 ஓட்டங்களையும், மயூரன் மற்றும் கௌதமன் ஆகியோர் ஆட்ட மிழக்காமல் முறையே 24 மற் றும் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் விக்டோரியா அணி சார்பாக, ஜங்கரன் 4 ஓவர் கள் பந்துவீசி 38 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டு களையும், பிரசாத் 4 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட் டுகளையும், பிரியங்கன் 2 விக் கெட்டுகளையும் கைப்பற்றி னர். 230 என்ற இமாலய இலக்கை நோக்கிப் பதில ளித்தாடிய விக்டோரியா அணி, இலக்கை நோக்கிப் போராடாமல் சரணடைந்தது.

விக்டோரியா அணி, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப் பாட்டத்தில் பிரசாத் மற்றும் இன்பராசா ஆகியோர் முறையே ஆட்டமிழக்காமல் 29 மற் றும் 28 ஓட்டங்களையும், கஜேந்திரன் 24 ஓட்டங்களை



யும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்ற லைட்ஸ் அணி சார்பாக, ஜெரிக்துசாந்த் 4 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், கிரு பாகரன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

(ப)

# சாதனை இணைப்பாட்டத்துடன் இலங்கையை வீழ்த்திய இந்தியா!

சுற்றுலா இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டியில், இறுதி வரை போராட்டத்தை வெளிக்காட்டிய இந்திய அணி, இலங்கை அணியை டக்வத் லூவிஸ் முறையில் 3 விக்கெட்டுகளால் வீழ்த்தியதுடன், ஐந்து போட்டிகள் கொண்ட தொடரிலும் 2:0 என முன்னேறியுள்ளது.

கண்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் தொடங்கியிருந்த போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தை இலங்கைக்கு வழங்கினார்.

சுழலிற்கு சாதகமான ஆடுகளத்தில் தமது 800ஆவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி களம் கண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் மைதானம் விரைந்த நிரோஷன் திக்வெல்ல மற்றும் தனுஷ்க குணத்திலக ஆகியோர் பலத்த எதிர்பார்ப்புகளுடன் இலங்கை அணியின் துடுப்பாட்டத்தை ஆரம்பம் செய்தனர்.

போட்டியின் எட்டாவது ஓவரில் ஜஸ்பிரிட் பும்ரா வீசிய பந்தை எதிர்கொண்ட திக்வெல்ல அதனை துரதிஷ்டவசமாக ஷிக்க தவானிடம் பிடி கொடுத்து ஓய்வறை திரும்பினார். திக்வெல்ல ஆட்டமிழக்கும் போது 24 பந்துகளுக்கு 3 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 31 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறிது நேரத்தில் ஏனைய ஆரம்ப துடுப்பாட்ட வீரரான தனுஷ்க குணத்திலக, 19 ஓட்டங்களுடன் ஏமாற்றி வெளியேற, அதன் பிறகு துடுப்பாட வந்த இலங்கை அணியின் தலைவர் உபுல் தரங்க இலகுவான பிடியொன்றை எதிரணிக்கு வழங்கி மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த இரண்டு விரைவான விக்கெட்டுகளையும் அடுத்து, குசல் மெண்டிஸ் மற்றும் அஞ்சலோ மத்யூஸ் அணிக்காக கொஞ்சம் போராடியிருந்தனர். அவர்கள் இருவரையும் இந்திய அணியின் சுழல்வீரர்கள் ஓய்வறை நோக்கி அனுப்ப ஒரு கட்டத்தில், இலங்கை அணி 121 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து பரிதாபமான ஒரு நிலைக்கு சென்றிருந்தது.

இவ்வாறனதோர் இக்கட்டான நிலையில் பொறுமையாக இலங்கை அணியை மீட்டு எடுக்கும் நோக்கோடு ஆடியிருந்த மிலிந்த சிறிவர்தன மற்றும் சாமர கப்புகெதர ஜோடி பொறுப்பான முறையில் ஓட்டங்களைச் சேர்த்தது.ஆறாவது விக்கெட்டுக்காக இந்த ஜோடியினால் 91 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக பகிரப்பட்டன. இதனால், பெரும் நெருக்கடி ஒன்றிற்கு உள்ளாக இருந்த இலங்கை அணி அதிலிருந்து மீண்டு கொண்டது.

ஆறாவது விக்கெட்டாக பறிபோன சிறிவர்தன தனக்கு கிடைத்த வாய்ப்பின் மூலம், தனது முன்றாவது ஒரு நாள் அரைச் சதத்தை பூர்த்தி செய்து கொண்டதுடன், மொத்தமாக 58 பந்துகளில் 2 பவுண் டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 58 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

சிறிவர்தனவை அடுத்து துரித கதியில், தமது பின்வரிசை வீரர்களை இழந்த இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து 236 ஓட்டங்களைக் குவித்துக் கொண்டது.

இந்திய அணி சார்பாக பந்து வீச்சில் வலது கை வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா 43 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்ததுடன், சுழல் வீரர் யுஸ்வேந்திர சாஹல் இரண்டு விக்கெட்டுகளை பதம் பார்த்திருந்தார்.

முதல் இன்னிங்ஸை அடுத்து மழை குறுக்கிட்ட காரணத்தால், போட்டியின் இரண்டாம் இன்னிங்ஸ் ஆரம்பிக்க சற்று தாமதமானதோடு, இந்திய அணிக்கு வெற்றி இலக்காக 47 ஓவர்களில் 231 ஓட்டங்கள் நிர்ணயம் செய்யப்பட்டன.வெற்றி இலக்கை அடைவதற்கு மைதானம் விரைந்த இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான, ரோஹித் சர்மா மற்றும் ஷிகர் தவான் ஆகியோர் அதிரடியான முறையில் ஓட்டங்களைச் சேர்த்தனர்.

முதல் விக்கெட்டுக்காக 109 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்தவேளை, போட்டியின் 16 ஆவது ஓவரை வீசிய இலங்கை அணியின் சுழல் வீரர் அகில தனஞ்சய ரோஹித் சர்மாவை LBW முறையில் ஆட்டமிழக்கச் செய்து தடுத்து நிறுத்தியிருந்தார்.

ஆட்டமிழக்கும் போது, அரைச்சதம் தாண்டியிருந்த ரோஹித் சர்மா மொத்தமாக 45 பந்துகளில் 5 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 54 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

ரோஹித் சர்மாவின் விக்கெட்டைத் தொடர்ந்து மறுமுனையில், பந்துவீச்சில் சிறப்பாகச் செயற்பட்ட மிலிந்த சிறிவர்தனவால், இந்திய அணியின் மற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷிக்கர் தவானும் அஞ்சலோ மத்யூஸ் எடுத்த அபார பிடியெடுப்பால் வீழ்த்தப்பட்டிருந்தார். ஆட்டமிழக்கும் போது, தவான் 49 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து போட்டியின் 18ஆவது ஓவரை மீண்டும் வீசிய அகில தனஞ்சய, அந்த ஓவரில் இந்திய அணியின் முக்கிய மூன்று வீரர்களான லோக்கேஷ் ராகுல், கேதர் ஜாதவ் மற்றும் அணித் தலைவர் விராட் கோஹ்லி ஆகியோரை முறையே 4,1,4 ஆகிய ஓட்டங்களுடன் போல்ட் செய்து ஓய்வறை அனுப்பினார். இதனால், இந் திய அணிக்குச் சார்பாக இருந்த இப் போட்டியின் போக்கே முழுமையாக மாறியிருந்தது.

மேலும், இந்திய அணியின் இரண்டு விக்கெட்டுகளை அகில தனஞ்சய பதம்பார்த்த காரணத்தால் இந்திய அணி, ஒரு கட்டத்தில் 131 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை பறிகொடுத்து இக் கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது.

இவ்வாறனதொரு நிலையில், மைதானத்தில் நின்ற மஹேந்திர சிங் தோனி, உடன் கைகோர்த்த புவனேஸ்வர்குமார் நிதானமான முறையில் துடுப்பாடி எட்டாவது விக்கெட்டுக்காக வீழ்த்தப்படாத 100 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தார்.

இதனால், இந்திய அணி 44.2 ஓவர்களில் 231 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

இலங்கை அணி சார்பில், பந்து வீசிய அகில தனஞ்சய 54 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றி ஒரு நாள் போட்டிகளில் தனது சிறப்பான பந்துவீச்சை பதிவு செய்திருந்ததுடன், மிலிந்த சிறிவர்தன ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தார். (ப)

# யாழ். பாடசாலைகளின் கிரிக்கெட் தாக்குதல்

## முதலாம் திகதி முதல் 5ஆம் திகதி வரை 20 அணிகள் களத்தில்!




(கங்கா)

யாழ்.மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் மற்றும் பிரித்தானிய தமிழ் கிரிக்கெட் லீக் இணைந்து, வடக்கு – கிழக்குப் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் இருபது – 20 துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியொன்றை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளன.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்.மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத் தலைவர் வண.பிதா எம்.ஜெரோ செல்வநாயகம் இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

கிரிக்கெட் தாக்குதல் – 2017 (Cricket Bash – 2017)என்னும் பெயரில் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரையில் இந்தச் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது. இந்தச் சுற்றுப்போட்டியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து 20 பாடசாலைகள் அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெற்று ஒவ்வொரு பிரிவிலும் இருந்து தலா 2 அணிகள் தெரிவு செய்யப்பட்டு, தொடர்ந்து காலிறுதி, அரையிறுதி ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் நடைபெறவுள்ளன.

முதற்சுற்று ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் விக்டோரியாக் கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளன.

‘ஏ’ பிரிவில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் மட்டக்களப்பு சென்.மைக்கல் கல்லூரி ஆகிய அணிகள் உள்ளன. ஏ பிரிவு அணிகளுக்கான ஆட்டம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

‘பி’ பிரிவில் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் கிளிநொச்சி மகா வித்தியாலயம் ஆகிய அணிகள் உள்ளன. இந்த பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

‘சி’ பிரிவில் வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் மன்னார் சித்திவிநாயகர் மகா வித்தியாலயம் ஆகிய அணிகள் உள்ளன. இந்த பிரிவு அணிகளுக்கான போட்டிகள் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

‘டி’ பிரிவில் மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி மற்றும் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி ஆகிய அணிகள் உள்ளன. இந்தப் பிரிவு அணிகளுக்கான போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

மொத்தமாக முதற்சுற்று ஆட்டங்கள் தொடக்கம் இறுதிப்போட்டி வரையில் 47 போட்டிகள் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு போட்டியிலும் ஆட்ட நாயகன் தெரிவு செய்யப்படுவார்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள துடுப்பாட்ட வீரர்களின் திறனை வளர்ச்சியடையச் செய்யவும், இந்த மாகாணங்களிலிருந்து தேசிய அணிக்கு வீரர் உள்வாங்கப்படவேண்டும் என்ற நோக்குடனும் பிரித்தானிய தமிழ் கிரிக்கெட் லீக் இந்தச் சுற்றுப்போட்டியை நடத்துகின்றது. இந்த வருடம் ஆரம்பமாகும் இந்தச் சுற்றுப்போட்டியானது வருடாவருடம் நடத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 3,4ஆவது ஒரு நாள் ஆட்டம்: அணித் தலைவராக கபுகெதர

### உபுல் தரங்கவிற்கு தடை விதிப்பு

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது மற்றும் நான்காவது ஒருநாள் போட்டிகளுக்கான இலங்கை அணித்தலைவராக சாமர கபுகெதர நியமிக்கப்பட் டுள்ளார்.

இலங்கை கிரிக்கட் சபை இதனைத் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியின் போது, குறிப்பிட்ட கால நேரத்தில் ஓவர்களை வீசி முடிக்கத் தவறியமை காரணமாக இலங்கை அணித்தலைவர் உபுல் தரங்கவிற்கு இரண்டு ஒருநாள் போட்டிகளில் விளையாட ஐசிசி தடை விதித்திருந்தது.

அதன்படி, எதிர்வரும் இரண்டு போட்டிகளுக்கு சாமர கபுகெதர இலங்கை அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை , பாகிஸ்தான் அணியுடன் இடம்பெறவுள்ள இருபதுக்கு இருபது போட்டித் தொடரில் உலக கிரிக்கெட் அணி சார்பாக இலங்கை அணியின் திசர பெரேரா பெயரிடப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் இடம்பெறவுள்ள மூன்று போட்டிகளைக் கொண்ட சுதந்திர தின கிண்ண இருபதுக்கு இருபது தொடருக்கான உலக அணியின் தலைவராக தென்னாபிரிக்காவின் டூ பிளஸ்ஸிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வீ.விக்னேஸ்வரனுக்குத் தாம் அனுப்பிய கடிதத்திலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் 4 வருடங்களில் 6 ஆவதுதடவையாக புதிய அமைச்சரவையை நியமித்தமையையிட்டு என்னுடைய பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தப்புதிய அமைச்சரவைத் தெரிவின்போது தங்களுக்கு ஏற்பட்ட அழுத்தங்கள், மன உளைச்சல்கள், தடுமாற்றங்கள், எதிர்பார்ப்புகள் இவை யாவும் நான் நன்கு அறிந்தவையே. இருந்த போதிலும், முதலாவது அமைச்சரவை நியமிக்கும்போது அதிலிருந்த குறைபாடுகளையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நீண்ட அரசியல் அனுபவமும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருந்த புளொட் தலைவர் சித்தார்த்தனுக்கும் ரெலோவின் சிரேஷ்ட உறுப்பினர் சிவாஜிலிங்கத்துக்கும் அமைச்சு பதவி வழங்கியிருக்க வேண்டும் என்பதோடு வடமாகாண சபையின் ஒரே ஒரு பெண் உறுப்பினர் என்பதற்கு அப்பால் கடந்த மாகாண சபை தேர்தலின் போது தங்களுக்கு அடுத்தபடியாக வட மாகாணத்திலேயே அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்த திருமதி அனந்த சசிதரனுக்கும் தாங்கள் அமைச்சு பதவி வழங்கி இருக்க வேண்டும்.

மேலும் போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்கி இருக்க வேண்டும் என்பது என்னுடைய நிலைப்பாடாக இருந்தது.

இருந்த போதிலும், இரண்டாவதுஒட்டுமொத்த அமைச்சரவை மாற்றத்தின் போது தாங்கள் உறுதியளித்தமையின்படி புளொட் அமைப்புக்கும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நீங்கள் அமைச்சு பதவி வழங்கியமையோடு திருமதி அனந்தி சசிதரனுக்கும் அமைச்சு பதவி வழங்கியமையையிட்டு தங்களுக்கு எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் எந்தவொரு சூழ்நிலையிலும் இனி ஓர் அமைச்சரவை மாற்றத்தைச் செய்ய முற்படாமல் வடமாகாண சபையை வினைத்திறனாகவும் வெளிப்படைத் தன்மையோடும் மக்கள் நலன் சார்ந்தும் நீங்கள் நடத்திச் செல்ல வேண்டும் என்று தங்களை விநயமாக வேண்டிக் கொள்கின்றேன். – என்று உள்ளது.

## கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், கடலோரப் பாதுகாப்புக்காக பல கப்பல்களை இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளோம். இக்கப்பல்கள் கொள்வனவு கடத்தல்களைக் கட்டுப்படுத்துவதற்கேயாகும். இன்னும் ஒரு வருடத்தை எமக்குத் தாருங்கள். கடல் வழியாக இடம்பெறும் அனைத்து சட்ட விரோத செயல்களையும் கட்டுப்படுத்த முடியும். – என்றார்.

"இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களுக்கு அவர்களது எல்லை தெரியாததாலேயே எல்லை மீறி மீன் பிடிக்கின்றார்கள். எனவே, அவர்களது கடல் எல்லையைச் சரியாக காண்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்." – என்றும் அவர் கூறினார். (உ)

## சட்டமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான விசேட சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை நீதி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியமையை அடுத்து ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுயாதீனத்திற்கு பங்கம் ஏற்பட்டுள்ளதாக கூட்டு எதிரணி குற்றஞ்சாட்டி வருகிறதே?" – என ஜனாதிபதியிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பிணைமுறி தொடர்பான ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் நிறைவுற்று அதன் அறிக்கை பெற்றுக்கொள்ளும் வரை அது தொடர்பில் எவரும் எதையும் தெரிவிக்க முடியாது. அந்த அறிக்கை கிடைத்ததும் உடனடியாக சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

"அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை எவராவது மீறி செயற்படுவாரானால் அது குற்றமென்பது சகல அரசியல்வாதிகளுக்கும் தெரிந்திருக்க வேண்டிய ஒன்று. இந்தக் கூட்டுப் பொறுப்பு மீறப்பட்ட நிலையில் தான் நான் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரையும் அழைத்து அவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்கியுள்ளேன். கூட்டுப்பொறுப்பானது கட்சி பேதமின்றி அமைச்சரவையில் பின்பற்றப்பட வேண்டியது." –என்று மேலும் கூறினார் ஜனாதிபதி.

## செப்.2...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிடப்பட்டிருந்த பொது அறிவுப் பரீட்சை மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பரீட்சையின் பகுதி-02 ஆகிய பரீட்சைகளே செப்ரெம்பர் மாதம் 04ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

நாள்காட்டியில் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியாக இருந்த ஹஜ் பெருநாள் தினம் 02ஆம் திகதி கொண்டாடப்படஉள்ளமையைச் சுட்டிக்காட்டி கூறி, முஸ்லிம் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்தத் தினம் மாற்றம் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்படி செப்ரெம்பர் மாதம் 02ஆம் திகதி பொது அறிவுப் பரீட்சை செப்டம்பர் மாதம் 04ஆம் திகதி காலை 08.30 மணி முதல் காலை 11 மணி வரையிலும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பரீட்சையின் பகுதி – 02 பிற்பகல் 12.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரையும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரம் அன்றையதினம் செல்லுபடியாகும் என்பதுடன், மேலதிக தகவல்கள் தேவையாயின் 1911 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொள்ள முடியும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றைய எமது பத்திரிகையில், 02 ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சைகள் 03 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டன என முன்னர் வந்த தகவல்களை மேற்கோள்காட்டி பிரசுரமாகியிருந்தது. அது தற்போது 4ஆம் திகதியே நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கஞ்சாப் பொதிகள் கடற்கரை மணலினுள் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டனர்.

இந்த கஞ்சாப் பொதிகளின் மொத்தத் தொகை இலங்கை மதிப்பின்படி சுமார் 1கோடி 40 இலட்சம் ரூபாய் எனவும் இந்த கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கண்டறிவதற்காக தனுஷ்கோடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## 20ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைமைகளை 40:60 என்ற விகித அடிப்படையில் கலந்து, ஒரு தேர்தல் திட்டத்தை மாகாண சபைத் தெரிவுக்கும் அறிமுகப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டது.

இதற்காகக் கொண்டு வரப்படும் இந்த அரசமைப்புத் திருத்தம் இப்போது உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அந்தத் திருத்தத்தை எதிர்த்து நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில உட்பட பலர் உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்துள்ளனர்.

இந்த அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேறினால் போதும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்குமானால் அதனை அரசு முன்னெடுக்கும் என்று –

இல்லாமல், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதுடன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, நேரடியாக மக்களின் அங்கீகாரமும் பெறப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்குமானால் இந்தத் திருத்தத்தை முன்னெடுக்கும் திட்டத்தை அரசு கைவிடும் என்றும் –

அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## நீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சராகவும் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்த நிகழ்வு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

நீதி மற்றும் புத்தசாசன அமைச்சராக இருந்த விஜேதாஸ ராஜபக்ஷ அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டமையை அடுத்து அந்தப் பொறுப்புகள் இவர்கள் இருவருக்கும் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன. (உ)

## அடையாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்படவில்லை. எனினும், இந்த மாதம் 31ஆம் திகதி இந்த அடையாள அணிவகுப்பு நடத்தப்படும் என யாழ்.நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் தெரிவித்துள்ளார்.

இந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களை நேற்றைய தினம் (2017.08.25) அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு யாழ். நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது. ஆனால் அந்த அடையாள அணிவகுப்பு இன்று நடைபெறவில்லை எனவும், 31 ஆம் திகதி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம் எதிர்வரும் 30ஆம் திகதி உலகெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அன்றைய தினத்தில் யாழ்ப்பாணம் மற்றும் இறுதி யுத்தம் தீவிரமாக நடை பெற்ற முல்லைத்தீவு மாவட்டம் போன்ற இடங்கள் உட்பட வடக்கு, கிழக்கின் 8 மாவட்டங்களிலும் கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தவிருக்கின்றோம்.

இந்த நிலையில் வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் அன்றைய தினம் வவுனியாவில் நிகழ்வை ஒழுங்குபடுத்தி நடத்துவார்.

அதேபோல், முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்திற்கு முன்பாக அன்றைய தினம் நண்பகல் 12 மணி முதல் சுமார் ஒரு மணி வரை கவனவீர்ப்புப்போராட்டத்தை மேற்கொள்வதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலப்பகுதியில் வைத்துத் தான் நூற்றுக்கணக்கானவர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள். அந்த இடத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் வரை கவனவீர்ப்புப் பேரணியொன்றை நடத்துவது தொடர்பிலும் ஆராய்ந்து வருகிறோம்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு முன்பாகக் காலை 08.30 மணி முதல் 09.30 மணி வரை கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறும்.

அதேபோன்று கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் அந்தந்த மாவட்டச் செயலகங்களுக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

இந்தப் போராட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் ஏனையோரையும் கட்சி வேறுபாடுகள் இன்றிக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம். – என்றார். (ம)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது அதற்கு ஆதரவாக 120 வாக்குகள் கிடைத்தன. 44 பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

எனினும் இந்தச் சட்டமூலத்துக்கு பெருவாரியான திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு அவையும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்தத் திருத்தங்கள் அனைத்தையும் உள்ளடக்கி, இந்தச் சட்டம் உரிய வடிவம் பெறுவதற்கு குறைந்தது சில வாரங்கள் எடுக்கும் எனக் கூறப்படுகின்றது. அதன் பின்னர் அது சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படும். அவர் அதில் ஒப்பமிடும் போதே அந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும்.

அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து 75 முதல் 100 நாள்களுக்குள் தேர்தலை நடத்துவதற்கு சட்ட ஒழுங்குகள் உள்ளன என்று தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, டிசெம்பர் கடைசியில் அல்லது ஜனவரி முற்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நாடு முழுவதிலும் ஒரே சமயத்தில் நடைபெறுவது பெரும்பாலும் உறுதி என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## அரசமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லாட்சி அரசு மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவைத் திரட்டுவதாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 எம்.பிக்களினதும் ஒத்துழைப்பு மிகக் கட்டாயமாகும்.

இந்தப் பின்புலத்திலேயே இந்த விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் நிபந்தனைகள் முக்கியத்துவம் பெறுகின்றன என அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கூட்டமைப்பின் நிபந்தனைகள் தொடர்பாக அதன் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

புதிய தேர்தல் முறைமையை – அதாவது விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தையும், தொகுதிவாரி பிரதிநிதித்துவத்தையும் இணைந்த கலப்பு முறைமையை – மாகாண சபைத் தெரிவுக்கும் கொண்டுவருவதற்காகவே இந்த அரசமைப்புத் திருத்தம் என அரசு கூறுகின்றது. அதனைச் செய்வதற்காகவே, உடனடியாக நடைபெறவிருக்கும் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்களையும் அரசு தள்ளிப்போடுவதாக கூறுகின்றது.

அது உண்மையானால் –

மேற்படி கலப்புத் தேர்தல் முறைமையை நாடாளுமன்றத் தெரிவுக்கும் பிரயோகிப்பதற்கு சிபாரிசு செய்யும், புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையை அரசு வெளியிட வேண்டும். அதனை செப்ரெம்பர் முதல் வாரத்தில் – 6ஆம் திகதி வழிகாட்டல் குழுக் கூட்டத்தை அடுத்து – வெளியிடலாம் என்று இப்போது அரசுத்தரப்பில் கூறப்படுகின்றது.

இருபதாவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றுக்கு விவாதத்துக்கு வர முன்னர் –

ஒன்று – மேற்படி இடைக்கால அறிக்கையை அரசு, அரசமைப்புப் பேரவையாக இயங்கும் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்திருக்க வேண்டும்.

இரண்டு – மாகாண சபைகளுக்கான தேர்தல் சட்டமூலத்தையும் ஒரே சமயத்தில் அரசு முன்வைக்க வேண்டும்.

மூன்று – மாகாணங்களில் தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை வகுத்தல் மற்றும் சட்ட ஏற்பாடுகள் ஒரு வருடத்துக்குள் பூர்த்தியாக வேண்டும். அதாவது, இப்போது இருந்து ஒரு வருடத்துக்கு மேல் எந்த மாகாண சபையின் பதவிக் காலமும் நீடிக்கப்படக் கூடாது.

– இந்த நிபந்தனைகளை அரசு ஏற்றுச் செயற்பட்டால் மட்டுமே கூட்டமைப்பு இந்த அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவளிக்கும் – என்றார் சுமந்திரன் எம்.பி. (உ)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள்குடியேற்றம் இடம்பெற்ற இடத்தில் குப்பைக்குத் தீ வைத்த போது மர்மப்பொருள் வெடித்ததில் பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவசரமாக மாற்றப்பட்டனர்.

## உடுப்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெங்களூரில் இருந்து கொல்லூருக்கு அருகில் உள்ள அரிச்சூருக்கு ஹெலிகொப்டரில் செல்லும் பிரதமர் ரணில் அங்கிருந்து வாகனத்தில் மூகாம்பிகை ஆலய விடுதிக்குச் செல்வார்.

ஆலயத்தில் பிரதமருக்கு பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பளிக்கப்படுகின்றது.

இன்று பிற்பகல் 1.30 மணி வரை அவர் அங்கு தங்கியிருப்பார்.

# ஜனாதிபதியின் கீழ் பௌத்த சாசன அமைச்சு வரவேண்டுமென மகாநாயக்கர்கள் வலியுறுத்து!

பௌத்த சாசனங்கள் அமைச்சு ஜனாதிபதியின் கீழ்கொண்டு வரப்பட வேண்டும் என மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மூன்று பீடங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் மாநாயக்க தேரர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

பௌத்த மத விவகாரங்களில் சிரத்தையுடன் செயற்பட்ட விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில், அந்த அமைச்சின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள மிகவும் தகுதியானவர் ஜனாதிபதி மட்டுமே எனத் தெரிவித்துள்ளனர்.

எனவே, ஜனாதிபதி பௌத்த சாசன அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென மூன்று பீடங்களினதும் மகாநாயக்க தேரர்கள் விரும்புகின்றனர் என அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் நாயகம் கலாநிதி மெதகம தம் மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் சனத்தொகையில் நூற்றுக்கு 75 வீதமானவர்கள் பௌத்தர்களாவர். பௌத்த மதத்தைப் பாதுகாப்பது சுலபமான விடயம் கிடையாது. விஜயதாஸ ராஜபக்ஷ இந்தப் பணியைச் செவ்வனே மேற்கொண்டு வந்தார்.

பௌத்த சாசன அமைச்சின் அதிகாரிகள் நினைத்தவாறு தீர்மானம் எடுக்கவோ அல்லது ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களுக்கு தேவையான வகையில் செயற்படுவதற்கு இடமளிக்காது அமைச்சின் சகல அதிகாரங்களும் ஜனாதிபதியின் கீழ்கொண்டு வரப்பட வேண்டும் என தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றைய தினம் பௌத்த சாசன அமைச்சராக காமினி ஜெயவிக்ரம பெரேரா ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## லயன்ஸ் கழக புதிய ஆளுநர் வரவேற்பு நிகழ்வு இன்று யாழில்!

யாழ்ப்பாணம், ஓக.26

லயன்ஸ் கழக 306 பி.I இன் ஆளுநராக தெரிவாகியுள்ள கமிலஸ் பெர்னாண்டோவை வரவேற்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு யாழ். நகரிலுள்ள திவ்ய மஹாலில் மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் அனைத்து லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் கலந்துகொண்டு புதிய ஆளுநருக்கு பாராட்டுத் தெரிவிக்குமாறு நிகழ்வை ஏற்பாடு செய்தோர் கோரியுள்ளனர்.

(இ)

## லயன்ஸ் கழகத்தின் தலைமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக.26

லயன்ஸ் கழக 306 பி.I உறுப்பினர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நாளை ஞாயிற்றுக்கிழமை கிறீன் கிறாஸ் விடுதியில் நடைபெறவுள்ளது.

இந்த பயிற்சி காலை 8.30 மணியிலிருந்து மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் கழக உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ)

## தென்மராட்சி வலய ஆங்கிலமொழி தின நிகழ்வுகள் இன்று

சாவகச்சேரி, ஓக.26

தென்மராட்சி கல்வி வலய ஆங்கிலபாட பிரிவினரின் வலய நிலை ஆங்கில மொழித் தின நிகழ்வுகள் இன்று காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறுகின்றன.

வலயக்கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக தொழில்நுட்ப பீட பேராசிரியர் க.கந்தசாமி கலந்து கொள்ளவுள்ளார்.

(இ)

## அரசியல் கைதிகள் விடுவிப்புக்கான போராட்டம்; முன்னிலை சோசலிசக் கட்சி செயலர் ஆதரவு!





கிளிநொச்சி, க. 26

முன்னிலை சோசலிசக் கட்சியின் அமைப்புச் செயலாளர் குமார் குணரத்தினம் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான போராட்டத்திற்கு நேரில் சென்று ஆதரவு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான யுத்த காலப் பகுதியிலும் அதற்குப் பின்னரும் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறும், தமிழ் அரசியல் கைதிகளைவிடுதலைசெய்யநடவடிக்கை எடுக்குமாறும் கோரி கிளிநொச்சியில் தொடர் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

சுமார் 186 நாள்கள் தாண்டியுள்ள இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளவர்களைச் சந்தித்து ஆதரவு தெரிவிக்கும் வகையில் முன்னிலை சோசலிசக் கட்சியின் அமைப்புச் செயலாளர் குமார் குணரத்தினம் நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கான விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்தார்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் குறித்த போராட்டத்தின் எதிர்காலம் மற்றும் தீர்வுகள் குறித்தும் குமார் குணரத்தினம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

முன்னாள் ஆஸ்திரேலியப் பிரஜையான குமார் குணரத்தினம் சுற்றுலா விசாவில் இலங்கை வந்து அரசியலில் ஈடுபட்ட காரணத்தால் ஒரு வருடத்துக்கும் மேலாக விளக்கமறியல் மற்றும் ஒரு வருட சிறைத்தண்டனை என்பவற்றை அனுபவித்த அரசியல் கைதியாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2000 பொலிஸாருக்கு ஆணைக்குழுவில் முறைப்பாடு!

கொழும்பு, ஓக. 26

2000 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டின் இதுவரையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என தேசிய பொலிஸ் ஆணைக் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

உரிய முறையில் முறைப்பாடுகளை விசாரணை செய்யாமை, முறைப்பாடுகளை விசாரணை செய்யும் போது ஒரு தலைப்பட்சமாகச் செயற்படுதல், பொலிஸார் தாக்குதல் நடத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பொலிஸ் உத்தியோகத்தர்களினால் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளில் 1500 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன.

கடந்த 2016 ஆம் ஆண்டில் மட்டும் கிடைக்கப் பெற்றுள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1879 எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க)

## சிறப்பாக இடம்பெற்ற விநாயகர் சதுர்த்தி!

கொழும்பு, ஓக. 26

விநாயகர் அவதரித்த நாளான நேற்று பெரும்பாலான ஆலயங்களில் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த வகையில், ஹட்டன் மற்றும் கொட்டகலை ஆகிய பகுதிகளில் உள்ள ஆலயங்களிலும் சதுர்த்தி பூஜைகள் விமரிசையாக நடத்தப்பட்டுள்ளன.

அத்துடன், சில ஆலயங்களில் மஞ்சளால் செய்த விநாயகர் சிலைகள் பூஜைக்கு வைக்கப்பட்டு பின்னர் நீர் நிலைகளில் கரைக்கப்பட்டன.

இந்த விசேட பூஜை வழிபாடுகளில் ஆலய பரிபாலன சபையினர் உட்பட பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மாதந்தோறும் வருகின்ற சதுர்த்தியைவிட, ஆவணி மாத சதுர்த்தி சிறப்பிடம் பெறுகின்றது. அத்துடன்,



விநாயகரின் முதன்மை விரதமாக ஆவணி சதுர்த்தி விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# கம்பவாரிதி ஜெயராஜுக்கு கௌரவம்; ‘சைவசித்தாந்தக் கலாநிதி’ பட்டம்



கம்பவாரிதி இ.ஜெயராஜுக்கு ‘சைவசித்தாந்தக் கலாநிதி’ பட்டத்தை தருமபுரம் ஆதீனம்வழங்குகிறது.

ஆதீனத்தின் இவ்வாண்டு ஆவணி மூலத் திருநாள் விழாவில் கம்பவாரிதி இ.ஜெயரா ஜுக்கு ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகஞானசம்பந்தசுவாமிகளால் ‘சைவசித்தாந்தக் கலாநிதி’ எனும் பட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் 31 ஆம்திகதி வழங்கப்படுகிறது.

தருமபுரம்ஆதீனத்தால் ஆண்டு தோறும் வழங்கப்படும் இப் பட்டத்தைப் பெருந்தமிழறிஞர்களான ஆர்.பி.சேதுப்பிள்ளை, கி.வா.ஜெகந்நாதன், ஏ.சிறீனிவாசராகவன், என்.ஆர். முருகவேள், அ.ச.ஞானசம்பந்தன், க.வஜ்சிரவேல் முதலியார், க.வெள்ளை வாரணர், டாக்டர் வை.ரட்ணசபாபதி, திருமதிசௌந்திரா கைலாசம், டாக்டர் ஔவை நடராஜன் முதலியோர் பெற்றுள்ளனர்.


ஏற்கெனவே திருவாவடுதுறை ஆதீனம் 2015 ஆம் ஆண்டு கம்பவாரிதி ‘சிவஞானக் கலாநிதி’ என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருந்தது.

இவ்வாண்டின் தொடக்கத்தில்கம்பவாரிதி தமிழ்நாடு அரசின் ‘கம்பர் விருது’ மற்றும் ஒரு லட்சம் ரூபா பொற்கிழியையும் பெற்றுக் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

# ரயிலுடன் மோதி காளை மாடு பலி

கொழும்பில் இருந்து யாழ்.நோக்கி வந்த ரயில் மோதியதில் காளை மாடு ஒன்று பலியானது. நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் சாவகச்சேரி ரயிலுடன் நிலையத்திற்கு அண்மையில் கச்சாய் வீதியில் உள்ள ரயில்கடவைப்பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

மேய்ச்சலுக்காக வந்த மாட்டுக்கூட்டம்தண்டவாளப் பகுதியில் நின்றது. அப்போதே இந்தச்சம்பவம் இடம்பெற்றது. பலியான மாடு சுமார் 20 ஆயிரம் ரூபா மதிப்புமிக்கது என உரிமையாளர் தெரிவித்தார். (ம-21)




# வட்டு. பொலிஸாரின் காலதாமதத்தால் பிரதேசத்தில் குற்றங்கள் அதிகரிப்பு

## பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஓக.26

பொன்னாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்காக நான்கு தடவைகள் சென்றபோதிலும் முறைப்பாட்டைப் பதிவு செய்ய பொலிஸார் மறுத்ததால், அவர்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவை நாடவேண்டிய நிலை ஏற்பட்டது.

அதன் பின்னரும் சட்டத்தரணி ஒருவருடன் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபோதே அவர்களின் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

கடந்தசிலதினங்களுக்கு முன்னர் பொன்னாலையில் இடம்பெற்ற கைகலப்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் காயமடைந்த இருவரையும் முச்சக்கரவண்டி ஒன்றில் ஏற்றிக்கொண்டு நேரே வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றனர். பொலிஸார் முறைப்பாட்டைப் பதிவுசெய்யாமல் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

அவர்கள் அடுத்து வந்த இரு தினங்களாக நான்கு தட வைகளுக்கு மேல் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபோதிலும் பொலிஸார் முறைப்பாட்டைப்பதிவுசெய்யவில்லை எனஅவர்கள்தெரிவித்தனர்.

இதனையடுத்து தாங்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்திற்குச் சென்று முறையிட்டமையுடன் அவர்களின் ஆலோசனைப்படி, சட்டத்தரணி ஒருவரின் உதவியுடன் சென்றபோதே முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது என அவர்கள் தெரிவித்தனர்.

இதன்பின்னரும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல், அவர்கள் இரு தரப்பினரும் சமாதானமாக பேசி அனுப்பப்பட்டனர் எனவும் தெரியவந்தது.

இதேவேளை, வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்படும்போது அது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸார் காட்டுகின்ற கால தாமதத்தால் தாங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கிவருகின்றனர் எனப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

காலத்திற்குக் காலம் புதிதாக நியமிக்கப்படுகின்ற பொலிஸ் பொறுப்பதிகாரிகளும் பொலி ஸார் மட்டத்திலோ பிரதேச மட்டத்திலோ எந்தவித மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வருடங்களாக தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் வட்டுகோட்டைப் பொலிஸாருக்கு எதிராகவே அதிகமான முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

# கிளிநொச்சி சைவசமயத்தின் காவலராக விளங்கிய சுவாமிகள்

யாழ்ப்பாணம், ஓக. 26

கிளிநொச்சி ஜெயந்தி நகரில் உள்ள மகாதேவா ஆச்சிரமத்தின் குரு பீடாதிபதியாக நீண்டகாலம் ஆன்மீகப் பணியாற்றிய ஸ்ரீமத் கணேசானந்த சுவாமிகள் மகாசமாதி அடைந்தசெய்தி குறித்து தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.

தவத்திரு யோகர்சுவாமிகளின் வேண்டுதலுக்கமைய இணுவில் வடிவேல் சுவாமிகள் கிளிநொச்சி பகுதியில் குடியேறிய மக்களுக்கு ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஜெயந்தி நகரில் குடில் அமைத்து தொண்டாற்றினார். அக்குடிலே “மகாதேவா ஆச்சிரமம்” என்ற நாமத்தோடு இன்று பெருவிருட்சமாக வளர்ச்சி பெற்றுள்ளது. வடிவேல் சுவாமிகளால் உருவாக்கப்பட்ட மகாதேவா ஆச்சிரமத்தை அவரது சமாதிக்குப் பின் நீண்டகாலம் நிர்வகித்த பெருமை இன்று சமாதி அடைந்துள்ள ஸ்ரீமத்கணேசானந்த சுவாமிகளைச் சாரும். போர்ச் சூழலுக்கு மத்தியில் கிளிநொச்சி மாவட்டத்தில் சைவசமயத்தின் காவலராக இவர் ஆற்றிய தொண்டு மறக்க முடியாதது. ஆதரவற்ற பல குழந்தைகளுக்கு நிழலாக விளங்கிய இப்பெருமகனாரின் பிரிவு மிகுந்த வேதனை தரும் செய்தியாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பலருக்கு சமய தீட்ஷை வழங்கி நற்கருத்துக்களை எடுத்துரைத்து வழிகாட்டியாகத் திகழ்ந்த இப்பெரியாரின் இடத்தை இன்று நிரப்புவதற்கு யாருமே இல்லை. தள்ளாடும் வயதிலும் இறுதி வரை பணியாற்றிய பெரியாருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன். – என்று கலாநிதி ஆறு.திருமுருகன் தமது இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (உ)

# பாலராமனை நினைவு கூர்ந்து சிட்னியில் நாளை நிகழ்வு



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் ஸ்தாபகத் தலைவரும் இலங்கை வங்கி வெள்ளவத்தை கிளையின் முன்னாள் முகாமையாளரும், சமூகசேவையாளருமாகிய நடராஜா பாலராமனின் நினைவு கூரல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னியில் 27 33 ஒரேலியா சென். தூங்க பியில் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நினைவு நிகழ்வில் ஆஸ்திரேலியாவில் வாழும் வட்டுக்கோட்டையை சேர்ந்தவர்கள் மற்றும் அன்னாரின் நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வை ஆஸ்திரேலியாவில் வசிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்கள், அன்னாரின் நண்பர்கள் மற்றும் வட்டு. இந்து வாலிபர் சங்க உறுப்பினர்கள் சேர்ந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

# சைட்டத்துக்கு எதிராக யாழில் நேற்று அணி திரள்வு




‘சைட்டம்’ தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக யாழ். முற்றவெளிப்பகுதியில் நேற்று நடத்தப்பட்ட பேரணி மற்றும் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.